30TH JANUARY 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 98 | பக்கங்கள் - 16 | editor.uthayam@gmail.com

## நிபா வைரஸ் ஆபத்தானது புறக்கணிக்க வேண்டாம்!

### வைத்திய நிபுணர் சமல் சஞ்ஜீவ எச்சரிக்கை!

இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளில் பதிவாகியுள்ள நிபா வைரஸ் நிலைமையை 02ம் பக்கம்பார்க்க...

# அமெரிக்க ஈரான் பலப்பரீட்சை உலகப் போராக மாறும் அபாயம்

### அதி நவீன ஆயுதங்களுடன் பயமுறுத்தும் ஈரான்

### கடல் முற்றுகைக்கு தயாராகும் அமெரிக்கா

### ஐரோப்பிய நாடுகளும் படைகளை அனுப்ப முஸ்தீபு

### ஈரானுக்கு ஆதரவாக களத்தில் குதிக்கும் சீனா ரஷ்யா

ஈரான் மீதான அமெரிக்காவின் முற்றுகை பலப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா ஈரான் மீதான முழுமையான கடல் முற்றுகை ஒன்றை ஏற்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை செய்துள்ள நிலையில் அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன் என்ற விமானம் தாங்கிக் கப்பல் திடீரென மறைந்துள்ளது.

இது அக்கப்பலில் காணப்படக்கூடிய அதிநவீன 03ம் பக்கம்பார்க்க...

## ஈரான் தூதுவராக முதன்முறையாக முஸ்லிம் பெண் நியமனம்!

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இலங்கைத் 02ம் பக்கம்பார்க்க...

## பாகிஸ்தான் பங்களாதேஷ் விமான சேவைகள் 14 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஆரம்பம்

பங்களாதேஷ் - பாகிஸ்தான் இடையே கடந்த 14 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நேரடி விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

பிமான் பங்களாதேஷ் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானம், நேற்று (29) 150 பயணிகளுடன் டாக்காவிலிருந்து பாகிஸ்தானின் கராச்சி நகருக்குப் புறப்பட்டுச் சென்றது.

2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு நாடுகளுக்கு இடையே நடைபெறும் முதல் வழக்கமான நேரடி விமானச் சேவை இதுவாகும்.

இதுவரை பங்களாதேஷ் மக்கள் பாகிஸ்தானுக்குச் செல்ல துபாய் அல்லது தோஹா வழியாகச் செல்ல வேண்டிய 02ம் பக்கம்பார்க்க...

## புஸ்வாணமாகிப் போன நுரைச்சோலை பிரேரணை



(எஸ்.எம்.அறூஸ்)

அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பிலும், அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் 02ம் பக்கம்பார்க்க...



## வளமான நாட்டுக்குள் வளமான கல்வியை வழங்குவது அரசின் பொறுப்பு

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

ஒவ்வொரு பிள்ளைக்கும் வளமான நாட்டிற்குள் வளமான கல்வியை வழங்குவதற்கான பாரிய பொறுப்பை அரசாங்கம் என்ற வகையில் நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பாடசாலைக்குச் 03ம் பக்கம்பார்க்க...

## ஐரோப்பாவின் தடைக்கெதிராக ஈரானின் அதிரடி முடிவுகள்

ஐரோப்பிய ஒன்றியம், ஈரானின் “இஸ்லாமிய புரட்சிகர காவல் படை“யை (IRGC) ஒரு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க நடவடிக்கை எடுத்து வருவதற்குப் பதிலடியாக, ஈரான் பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசித்து வருவதாக, “மெஹ்ர்“ (Mehr) செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரான் அரசு பரிசீலித்து வரும் அந்த நான்கு முக்கிய அதிரடி

1.ஐரோப்பிய தூதரகங்களின் பாதுகாப்பு மாற்றம்: 03ம் பக்கம்பார்க்க...

## புதிய அரசியல் கட்சிகள் பதிவு விண்ணப்பிக்க ஒரு மாத அவகாசம்

2026 ஆம் ஆண்டில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்காக, தகுதியுள்ள அரசியல் 02ம் பக்கம்பார்க்க...

## இனங்களுக்கிடையிலான சந்தேகங்களைப் போக்கி தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும்

### இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் சுனில் செனவி



இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலும் பொருளாதார 03ம் பக்கம்பார்க்க...

## இலங்கை சவுதி அரேபியாவுக்கிடையில் தொழிற்துறையை மேம்படுத்த பேச்சு!



இலங்கை மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு 03ம் பக்கம்பார்க்க...

## தோட்டத் தொழிலாளர் சம்பளம் அதிகரிப்பு!

### புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து!

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,750 ரூபாவாக அதிகரிப்பதற்கான வரலாற்று முக்கியத்துவமிக்க ஒப்பந்தம் இன்று வெள்ளிக்கிழமை (30) காலை பெருந்தோட்ட 03ம் பக்கம்பார்க்க...



## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளிடமிருந்து தேர்தல் ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த விண்ணப்பங்களை ஜனவரி 28 ஆம் திகதி முதல் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவமானது, 2026.01.21 ஆம் திகதியிடப்பட்ட 2472⁄21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுடன், கட்சியின் செயலாளரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை, தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலமாகவோ அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் செயலகத்திலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கட்சி அங்கீகரிக்கப்படுமிடத்து, 2026.01.13 ஆம் திகதியிடப்பட்ட 2471⁄24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட (ஆ) அட்டவணையில் உள்ள கட்சிச் சின்னங்களில், அந்தக் கட்சிக்காக ஒதுக்கி வைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் சின்னத்தைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

இதற்கு மேலதிகமாக கட்சியின் யாப்பு, உத்தியோகத்தர் குழாம் பட்டியல், கடந்த நான்கு வருடங்களுக்கான பெண் உத்தியோகத்தர்களின் பெயர்கள், விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதிக்கு முன்னரான நான்கு வருடங்களுக்கான கணக்காய்வு அறிக்கைகள், கட்சியின் தற்போதைய கொள்கைப் பிரகடனம் மற்றும் அரசியல் கட்சியொன்றாகக் குறைந்தது கடந்த நான்கு வருடங்களாவது தொடர்ச்சியாகச் செயற்பட்டதை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கக்கூடிய அனைத்து ஆவணங்களையும் தனித்தனி கோப்புகளாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அவற்றை, உரிய கட்சியின் செயலாளரினால் தேர்தல் ஆணைக்குழுவிற்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாக வருகை தந்து கையளிப்பதன் மூலமோ சமர்ப்பிக்க முடியும்.

குறித்த விண்ணப்பங்களை அனுப்பும்போது, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பம் – 2026“ எனக் குறிப்பிடப்பட வேண்டும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை தலைவர், தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்புமாறும் அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து கையளிக்குமாறும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை இருந்தது.

ஆனால் இனி வாரத்திற்கு இரண்டு முறை நேரடி விமானங்கள் இயக்கப்பட உள்ளன.

2024 இல் பங்களாதேஷ ில் ஷேக் ஹசீனா அரசு வீழ்ந்த பிறகு, இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் பதவி ஏற்றார். அவரது தலைமையின்கீழ் அந்நாடு பாகிஸ்தானுடன் தனது உறவை மேம்படுத்தி வருகிறது. அதே சமயம், இந்தியாவுடனான உறவில் விரிசல் அதிகரித்து வருகிறது.

ஏற்கனவே 2024 நவம்பரில் கராச்சியிலிருந்து வங்கதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்திற்குச் சரக்குக் கப்பல் போக்குவரத்துத் தொடங்கப்பட்ட நிலையில் தற்போது விமானச் சேவையும் தொடங்கப்பட்டுள்ளது.

## ஈரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவராக முதன்முறையாக முஸ்லிம் பெண்ணொருவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியையான பஸீஹா அஸ்மின் இப் பதவிக்கு நிய மிக்கப்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந் நியமனத்தை வழங்கியுள்ளார்.

டாக்டர் பஸீஹா ஏறத்தாழ 30 வருடங்களாக பல்கலைக்கழக பேராசிரியையாக பணி புரிந்து வருகிறார்.

## நிபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சுகாதார அதிகாரிகள் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு வருபவர்களை மையமாகக் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் நிபுணர் வைத்தியர் சமல் சஞ்சீவ வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், குடியேற்றம் மற்றும் நுழைவுப் பகுதிகளில் அதிகரித்த விழிப்புணர்வின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வரும் விமான நிலையங்கள் மற்றும் பிற நுழைவுப் பகுதிகளில் சுகாதார விழிப்புணர்வு திட்டங்கள், இரத்தம் தொடர்பான சுகாதார ஆலோசனை மற்றும் பொருத்தமான இடங்களில் தடுப்பூசி தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

நிபா வைரஸ் என்பது வௌவால்களால் முக்கியமாகப் பரவும் ஒரு ஜூனோடிக் வைரஸ் ஆகும், மேலும் இது மனிதர்களையும் விலங்குகளையும் பாதிக்கக்கூடும்.

இலங்கையில் இதுவரை எந்த நோயாளர்கள் கண்டறியப்படவில்லை என்றாலும், வைரஸின் பரவல் தொடர்பில் தீவர கவனம் தேவை என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, நிபா வைரஸ் மனிதர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

காய்ச்சல், உடல் வலி, தசை வலி மற்றும் வாந்தி ஆகியவை இதன் பொதுவான அறிகுறிகள் ஆகும், அதே நேரத்தில் கடுமையான நேரங்களில் மூளை வீக்கம் ஏற்படலாம் எனவும் இது ஆபத்தானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வௌவால்களின் சிறுநீர், உமிழ்நீர் அல்லது மலம் ஆகியவற்றுடன் நேரடித் தொடர்பு, அசுத்தமான உணவு அல்லது தண்ணீரை உட்கொள்வது மற்றும் பன்றிகள் போன்ற பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் தொடர்பு கொள்வதன் மூலம் இந்த வைரஸ் பரவுவதாக அறியப்படுகிறது.

இந்நிலையில், நோய் தொற்றாளர் ஒருவர் கண்டறியப்படும் வரை காத்திருக்கக்கூடாது என்று வைத்தியர் சமல் சஞ்சீவ வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களும், மாசுபட்ட உணவை உட்கொள்பவர்களும் விழிப்புடன் இருக்கவும், அதிகாரிகள் வழங்கிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும் அவர் அறிவுறுத்தினார்.

அதே நேரத்தில், நாட்டிற்கு ஏற்படக்கூடிய ஆபத்தைத் தடுக்க முன்கூட்டியே எச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தினார்.

## புஸ்வாணமாகிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதியமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ தலைமையில் இன்று (30) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்நாயக்க, மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுல. ரத்நாயக்க, எம்.எஸ். உதுமாலெப்பை, முத்து ரத்வத்த, ஏ.ஆதம்பாவா, கே.கோடிஸ்வரன், அஸ்ரப் தாஹிர், எம்.எஸ்.அப்துல் வாசித், சட்டத்தரணி நிசாம் காரியப்பர், சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன உள்ளிட்ட கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் ZAM. பைசல், விவசாய அமைச்சின் செயலாளரும், உள்ளூராட்சி ஆணையாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி, சுகாதார அமைச்சின் செயலாளர் திஸ ாநாயக்கா,திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இங்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், 2025 - 2026ம் ஆண்டில் அம்பாரை மாவட்ட செயலகம் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் வேறு தாபனங்கள் ஊடாக செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.


தொடர்ந்தும் அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி, காணி,வீதி அபிவிருத்தி,திண்மக்கழிவகற்றல், குடிநீர் திட்டம், யானை வேலி பாதுகாப்பு முறைமை போன்ற பல விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் உரிய அதிகாரிகள் இவ்விடயங்களில் அதீக அக்கரையுடன் பணியாற்றுமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் மற்றும் மாகாண ஆளுநர் ஆகியோரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

மேலும், நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தை நீதிமன்றத் தீர்ப்பை மையமாக வைத்து மக்களிடம் கையளிக்கும் பிரேரணையை பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ கொண்டு வந்த போது, பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் மற்றும் அக்கரைப்பற்று மாநகர சபை மேயர் ஏ.எல்.எம்.அதாஉல்லா ஆகியேர் பலமாக எதிர்த்ததுடன் பாராளுமன்றக் குழுவின் ஊடாகவே இதனை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டுமென நிசாம் காரியப்பர் இங்கு தெரிவித்தார்.

நுரைச்சோலை வீட்டுத் திட்டம் பாதிக்கப்பட்ட மக்களுக்குரியது எனவும் அக்காணிகள் யாவும் அக்கறைப்பற்று பிரதேசத்திற்குரிய காணிகள் என்பதையும் மிகவும் ஆணித்தரமாக மேயர் அதாஉல்லா குரல் எழுப்பினார். அவருக்கு ஆதரவாக அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ.எல். தவம் அவர்களும் தனது கருத்தை தெரிவித்தார். இதன்போது இரு தரப்பினருக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு எதிர்காலத்தில் பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைத்திட்ட நிகழ்வுகளில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை கொண்டு வந்த பிரேரணையை ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், பிரதியமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ ஏற்றுக்கொண்டு அதற்கு நடவடிக்கை எடுப்பதாக இங்கு தெரிவித்தார்.

தொடர்ந்தும், பிரஜா சக்தி குழுக்கள் நியமித்தப்படும்போது, கட்சி அரசியல் சாராமல் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்டால் தனக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ குறிப்பிட்டார்.

# மாவனல்லையில் இலவச மருத்துவ முகாம்



(பாரா தாஹீர்)

மகளிர் மற்றும் குழந்தை விவகார பணிப்பாளர் வைத்தியர் பெரோசி மொஹம்மட் அவர்களின் ஒத்துழைப்போடு ,ஆசிய மனித உரிமை மன்றத்தின் ஏற்பாட்டில், மருத்துவ முகாம் ஒன்று  மாவனல்ல பெலிகம்மன பொத்குள் விகாரையின் அண்மையில் நடைபெற்றது.

இவ் இலவச மருத்துவ முகாமில் கண் பரிசோதனை,கண்ணாடி வழங்குதல்,இரத்த பரிசோதனை,பல் பரிசோதனை,மனநல ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டன. இவ் ஏற்பாடுகளுக்கு மாவனல்லை மற்றும் கேகாலை மாவட்ட சிவில் நிருவனங்கள்,மாவனல்லை பொலிஸ் நிலையம்,நவலோக வைத்திய சாலை ஆசிரி ஒப்டிகல்ஸ் நிருவனம் என்பவன ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் ஏற்பாட்டாளர்களை இங்கு காணலாம்.

## வளமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதைக் காணும் வகையில், புத்தகப் பையின் சுமையைக் குறைத்து, அழுத்தங்களற்ற கற்றல் சூழலை உருவாக்குவது புதிய கல்வி மறுசீரமைப்பின் ஒரு விசேட அம்சமாகும். மனதிற்கு இனிய பாடசாலைச் சூழலை உருவாக்குவதற்கான “கனவுப் பாடசாலை“ (Dream School) திட்டத்தை யதார்த்தமாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இன்று முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட உங்கள் பிள்ளையின் எதிர்காலத்தை வெற்றிகரமாக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்”

ஜனவரி 29ஆம் திகதி அத்துருகிரிய குணசேகர ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்ற, புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் தேசிய விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

## ஐரோப்பாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானில் உள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதரகங்களுக்கு தற்போது தேசிய காவல்துறை பாதுகாப்பு அளித்து வருகிறது. இனி அந்தப் பாதுகாப்பை “புரட்சிகர காவல் படை“யின் (IRGC) நேரடி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது.

2.வணிகக் கப்பல்கள் மீதான சோதனை: ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வணிகக் கப்பல்களை, ஈரானின் புரட்சிகர காவல் படையின் கடற்படை மூலம் சிறப்பு ஆய்வுகளுக்கு (Special inspections) உட்படுத்துவது.

3.இராணுவ அதிகாரிகளை வெளியேற்றுதல்: ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் தங்கியிருக்கும் ஐரோப்பிய நாடுகளின் இராணுவ இணை அதிகாரிகளை (Military attachés) ஒட்டுமொத்தமாக நாட்டை விட்டு வெளியேற்றுவது.

4.விமான நிலையச் சலுகைகள் ரத்து: ஐரோப்பிய தூதர்களுக்கு விமான நிலையங்களில் வழங்கப்படும் சிறப்பு நெறிமுறைகளை (Protocols) ரத்து செய்து, அவர்களை சாதாரண மக்களைப் போல கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்துவது.

ஈரானின் இந்தத் திட்டங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவிற்குப் பதிலடி கொடுக்கும் நோக்கில், வகுக்கப்பட்டு வருவதாக அந்தச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான தொழிற்துறை சார் உறவுகளை வலுப்படுத்துவது குறித்த விசேட சந்திப்பொன்று கடந்த ஜனவரி 25 ஆம் திகதி ரியாத் நகரில் அமைந்துள்ள சவுதி கைத்தொழில் மற்றும் கனிம வள அமைச்சின் தலைமையகத்தில் நடைபெற்றது. இலங்கையின் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ சதுரங்க அபேசிங்க அவர்கள், சவுதி அரேபியாவின் கைத்தொழில் மற்றும் கனிம வளங்கள் பிரதி அமைச்சர் பொறியியலாளர் கலீல் பின் இப்ராஹிம் பின் சலாமாவைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது இலங்கையின் கைத்தொழில், இரசாயன மற்றும் கனிம வளத் துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விரிவான விளக்கமளிக்கப்பட்டது. இந்தத் துறைகளில் ஒத்துழைப்பை முன்னெடுக்க சவுதி தரப்பு விருப்பம் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை உறுதிப்படுத்த அமைச்சுகளுக்கு இடையில் நேரடித் தகவல் பரிமாற்ற பொறிமுறையொன்றை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் சவுதிக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## இனங்களுக்கிடையிலான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சியிலும் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவை பெரும்பாலும் சிங்கள மொழி ஆவணங்களில் பதிவு செய்யப்படுவதில்லை.

கலாநிதி றவூப் ஸெய்னின் இந்த முயற்சி அந்த இடத்தை நிரப்புவதுடன் இனங்களுக்கிடையிலான சந்தேகங்களை நீக்கி தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் என புத்தசாசன கலாச்சார மத விவகார அமைச்சர் கலாநிதி சுனில் தெரிவித்தார்.

கலாநிதி றவூப் ஸெய்ன் தமிழில் எழுதிய இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் வைத்து கையெழுத்திடப்பட்டது.

2026 வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைவாக, தற்போது 1,350 ரூபாவாக நிலவும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 400 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த 400 ரூபா அதிகரிப்பில் 200 ரூபாவினை அந்தந்த பிராந்திய தோட்ட நிறுவனங்களும், எஞ்சிய 200 ரூபாவினை அரசாங்கமும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

அதற்கமைய, தோட்டத் தொழிலாளர் ஒருவரின் புதிய நாளாந்த சம்பளம் 1,750 ரூபாவாக உயர்வடையும்.


இந்த உடன்படிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, தோட்ட நிறுவனங்கள் மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் நடத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாகக் குறிப்பிட்டார். ஜனவரி மாதம் தொழிலாளர்கள் பணிக்குச் சமூகமளித்த நாட்களின் அடிப்படையில், பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் இந்த அதிகரிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படும்.

அரசாங்கம் வழங்கும் 200 ரூபா கொடுப்பனவை வைப்பிலிடுவதற்காகத் தொழிலாளர்களின் வங்கித் தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளன. பெப்ரவரி 03 ஆம் திகதியளவில் ஊழியர்களின் வருகைப் பதிவேடுகள் கிடைத்தவுடன், அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையை நிறுவனங்களுக்கு விடுவிக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

பெருந்தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுனில் பொலியத்தே கருத்துத் தெரிவிக்கையில், இந்தத் தீர்மானத்தை ஒரு வரலாற்றுச் சாதனையாகக் கருதுவதாகக் குறிப்பிட்டார். இந்தச் சம்பள அதிகரிப்பால் தோட்ட நிறுவனங்களுக்கு 6 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான மேலதிகச் செலவு ஏற்படும் என்றும், எனவே இத்தொழில்துறையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த புதிய சம்பள உயர்வு 2026 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர், தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பள நிர்ணய சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 JANUARY 30 - FRIDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தம்: சமூகம் ஒருமித்த கருத்தை முன்வைக்க முன்வர வேண்டும்!

நீண்ட காலமாக தேங்கி கிடக்கும் முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தம் தொடர்பாக நீதி அமைச்சு முஸ்லிம் சிவில் அமைப்புகளிடமிருந்து கருத்துக்களை கோரியுள்ளது. நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயகார இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விரும்பியது தொடர்பாக கருத்துக்களை கூறியுள்ளார்.

15க்கும் மேற்பட்ட முஸ்லிம் அமைப்புகளிடம் தமது ஆலோசனைகளை முன்வைக்குமாறு நீதி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. 2009 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தீர்க்கப்படாமலிருக்கும் முஸ்லிம் தனியார் சட்டத்தின் பல திருத்தங்களை சமூகம் வேண்டி நிற்கின்றது.

ஒரு சில திருத்தங்கள் தொடர்பாக சமூகத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதன் காரணமாகவே சீர்திருத்தம் தொடர்பான ஆலோசனைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது, திருமணத்தின் போது மணப்பெண்ணின் சம்மதம் மற்றும் காதி நீதிமன்ற கட்டமைப்பை சீரமைத்தல் போன்ற பிரதான ஆலோசனைகள் குறித்து இணக்கப்பாடு ஏற்படுவது அவசியமாகும்.

அதேபோல் பெண்கள் தொடர்பாகவும் சில இணக்கப்பாடுகள் அவசியப்படுகின்றன. இந்த விடயங்கள் குறித்து சமூகத்தில் இணக்கப்பாடு காணப்படும் சூழல் உருவாகி இருப்பதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. உருவாகியுள்ள இந்த நல்ல சூழ்நிலையை பார்க்குமிடத்து தீர்வுக்கான பிரிதிநிதிகளை சமூக அமைப்புக்கள் முன்வைக்க இந்த வாய்ப்பினை பயன்படுத்த வேண்டும். சமூகத்தில் இது தொடர்பாக கருத்து முரண்பாடுகள் இருப்பதை தவிர்க்க முடியாது.

எனினும் இணங்க கூடிய விடயங்களில் விட்டுக்கொடுப்புகளை செய்து சமூகம் சார்பில் ஒருமித்த கருத்துக்களை முன் வைப்பதன் மூலம் இதை திருத்தும் வாய்ப்பை சமூக அமைப்புக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

2009 ஆம் ஆண்டு அப்போது நீதி அமைச்சராக இருந்த மிலிந்த மொரகொடநியமித்தசலீம்மர்சூக்தலைமையிலானகுழுஒன்பதுவருட கால முயற்சிக்குப் பின் முன் வைத்த சிபாரிசுகள் தொடர்பாக ஏற்பட்ட பிளவுகள் காரணமாக இரு வேறு சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டதனால் அப்போது பதவியில் இருந்த அரசாங்கத்திற்கு சீர்திருத்தங்கள் அடங்கிய புதிய சட்டத்தினை முன்னெடுக்க முடியவில்லை. அந்தப் பின்னணியில் தேசிய மக்கள் சக்தி அரசு இப்பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கில் முஸ்லிம் சமூக கருத்துக்களை கோரியுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி முஸ்லிம் அமைப்புகள் ஒருமித்த கருத்தினை முன் வைக்க வேண்டும். நீதியரசர் சலீம் மர்சூக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு சிபாரிசுகளை தாமாக முன்வந்து முன்வைப்பது சாலச் சிறந்தது. மீண்டும் ஆரம்பத்திலிருந்து சிபாரிசுகள் பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை.

இங்கு இரு குழுக்களும் முன்வைத்து இருக்கின்ற பரிந்துரைகளில் பல இணக்கப்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. திருமண வயது 18 ஆக இருக்க வேண்டும் என்று இப்போது சமூகத்தில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரண்படாத சிபாரிசுகளை, பிரேரணைகளை முஸ்லிம் அமைப்புகள் முன்வைக்க வேண்டும். முஸ்லிம் சிவில் அமைப்புகள் முஸ்லிம் பெண்கள் அமைப்புகளின் கருத்துக்களை உள்வாங்கி தேவைப்படும் இடத்தில் சமூகத்தின் சார்பில் விட்டுக்கொடுப்புகளை செய்து சமூக ஒட்டுமொத்த நன்மையையும் நோக்கமாகக் கொண்டு சிபாரிசுகளை பரிந்துரைக்க வேண்டும். கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி சட்டத்தில் நீண்ட காலம் வேண்டி இருக்கும் சிபாரிசுகளை வென்றெடுக்க முஸ்லிம் சமூகம் முன் வர வேண்டும்.

கிடைத்திருக்கும் இந்த அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விடாது பயன்படுத்திக் கொள்வது சமூகத்தின், குறிப்பாக கற்றறிந்தவர்களது கடமை என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.






## ஆளுனரால் திறந்து வைக்கப்பட்ட அனுராதபுர நகர சந்தை வாகன தரிப்பிடம்




(எம்.ரீ. ஆரிப்)

அனுராதபுரம் நகர பொதுச் சந்தை வாகன தரிப்பிடம் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் அனுராதபுரம் மாநகர மேயர் என்.கருணாரத்னவின் பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்டது.

அனுராதபுரம் தெற்கு போக்குவரத்து மையத்தை மையமாக கொண்ட பொதுச் சந்தையில் இந்த வாகன நிறுத்துமிடம் திறக்கப்பட்டுள்ளது. நீண்ட தூரம் பேருந்து அல்லது ரயிலில் பயணிக்கும் பயணிகள் தங்கள் வாகனங்களை இந்த வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி விட்டு அவர்கள் தங்கள் பயணத்தி லிருந்து திரும்பும் வரை இந்த வாகன நிறுத்துமிடத்தில் பாதுகாப்பாக விட்டுச் செல்ல முடியும். மேலும் புதிய பேருந்து நிலையத்தைச் சூழ ஏராளமான வணிக இடங்கள் உள்ளன. அந்த வணிகர்களின் வாகனங்கள் அவர்களின் வணிக இடங்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டன.

இந்த வாகன நிறுத்துமிடம் திறக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் தங்கள் வாகனங்களை இந்த வாகன நிறுத்துமிடத்தில் பாதுகாப்பாக விட்டுச் செல்ல முடியும். இங்கு 60 க்கும் மேற்பட்ட வாகனங்களை நிறுத்த வசதிகள் உள்ளன.

இதற்கான பாதுகாப்பு திட்டத்தை அனுராதபுரம் தலைமையக பொலிசாருடன் இணைந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## புத்தளம் - மன்னார் [B-379] வீதியை மீளத் திறக்கக் கோரி ஒரு இலட்சம் கையொப்பம் திரட்டும் நிகழ்வு கற்பிட்டியிலும் ஆரம்பம்





(சியாஜ்)

புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களை இணைக்கும் பாரம்பரியமான எலுவன்குளம் மற்றும் மரிச்சிகட்டி இடையே செல்கின்ற புத்தளம்-மன்னார்: (ட-379) வீதியை மக்களின் பாவனைக்காக உடனடியாக மீளத் திறக்க வலியுறுத்தி ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கான ஒரு இலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் மாபெரும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (23) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள புத்தளம் - மன்னார் பழைய வீதியை மீளத் திறக்க வேண்டும் என்ற மக்களின் நியாயமான கோரிக்கையை அரசின் உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இக் கையொப்ப போராட்டம் நான்கு மாவட்டங்களில் ஒருங்கிணைந்து முன்னெடுப்படுவதாக புத்தளம் - மன்னார் பாதை மீட்புக்கான மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த பாரிய கையொப்பத் திரட்டல், புத்தளம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை (23) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிகழ்வு, எதிர்வரும் பெப்ரவரி 01 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) வரை தொடர்ச்சியாக நடைபெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திகாமடுல்ல மீடியா போரத்தின் புதுவருட ஒன்று கூடல்





(ரிபாஸ்)

திகாமடுல்ல மீடியா போரத்தின் புதுவருட ஒன்று கூடலும் அங்கத்தவர்களுக்கு, பரிசுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும், ஒலுவில் வில்லாஹ் ஹோட்டலில் (15) இடம்பெற்றது.

திகாமடுல்ல மீடியா போரத்தின் பிரதித் தலைவரும் கல்முனை கல்வி வலய தமிழ்மொழி ஆசிரிய ஆலோசகருமான ஜெஸ்மி எம் மூஸாவின் நெறிப்படுத்தலின் கீழ் போரத்தின் தலைவர், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப். றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், தொழிலதிபருமான அப்துல் வாஸீத், சிரேஷ்ட ஒலி, ஒளி பரப்பாளர் சட்டத்தரணி ஏ.எம். தாஜ் உட்பட போரத்தில் புதிதாக இணைந்து கொண்ட வானொலி, தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களினதும், பிராந்திய, ஓய்வு நிலை மூத்த ஊடகவியலாளர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

## உலக வங்கியின் சமூக வலுவூட்டல் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்



(இஸட் ஏ.ஏ. றஹ்மான்)

உலக வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவி பெறும் பயனாளர்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. இதன் அடிப்படையில் அம்பாரை மாவட்டத்தில் மதிப்பாய்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் பின்னர் மாவட்ட சமூர்த்தி உத்தியோகத்தர்களுடனான உலக வங்கியின் சமூக வலுவூட்டல் திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் அம்பாரை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அம்பாரை மாவட்ட மேலதிக செயலாளரும் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளருமான எஸ்.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சமுர்த்தி திணைக்கள அதிகாரிகளும், உலக வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

உலக வங்கியின் சமூக வலுவூட்டல் திட்டத்தினூடாக அம்பாரை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களின் தற்போதைய நிலைமை மற்றும் வாழ்வாதார உதவி திட்டங்கள் நடைமுறையில் அமல்படுத்தப் படும் விதம் , கள ஆய்வின் அவதானிப்புக்கள், இத்திட்டங்களை பயனாளர்களுக்கு அதிகளவில் பயனுள்ளதாகவும், செயல்திறன் மிக்க வகையில் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அதிகாரிகளி னால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் விற்பனை கண்காட்சி




(அஷ்ரப் ஏ சமத்)

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்த "மர்ஹாபா" எனும் முன் கூட்டிய ரமழான் விற்பனை கண்காட்சி கல்லூரி மண்டபத்தில் அதிபர் நஸ்ரியா முனாஸ் தலைமையில் நடைபெற்றது.


இந்நிகழ்வுக்கு பழைய மாணவிகள் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட உள்ள அதிநவீன தொடர்மடி வகுப்பறை மற்றும் டிஜிட்டல் நிலையத்திற்காக நிதி சேகரிக்கும் முகமாக கடந்த 4 தடவையாக இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இக் கட்டிடத்தினை நிர்மாணிக்க ஆயிரம் மில்லியன் ஷரூபாவை சேகரிக்க வேண்டியுள்ளது. அதற்காக பழைய மாணவிகள், அதிபர், பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் முயற்சியின் பயனாக நூறு மில்லியன் ஷரூபாய் நிதியை சேகரித்துள்ளனர்.

இதன்போது கல்லூரி அதிபர் கருத்து தெரிவிக்கையில் இலங்கையில் புகழ் பெற்று விளங்கும் இப்பாடசாலை கடந்த 80 ஆண்டுகளை கொண்டுள்ளது. இக்கட்டிடங்கள் காலம் சென்ற சேர் ராசிக் பரீட் அவர்களின் அன்பளிப்பு செய்பவையாகும் சுமார் 2500 க்கும் மேற்பட்ட மாணவிகளையும் மும்மொழிகளும் கற்பிக்கும் அரசு தேசிய பாடசாலையின் எதிர்கால சமுதாயத்திற்கு மேலும் நிர்மாணிக்க வேண்டியுள்ளது. வகுப்பறைகள், கூட்ட மண்டபம், மற்றும் ஆய்வு கூடங்கள், விளையாட்டு, கணினி வகுப்புகள் இட நெருக்கடி களாலும் கட்டிடங்கள் பழுதடைந்த நாளும் இப்பாரிய புதிய 5மாடி க்கும் மேலான ஓர் தொடர் மாடியை கொண்டு இதனை நிரப்புவதற்கு இக் கல்லூரி வாழ் சமூகம் பாடுபட்டு வருகிறது ஆகவே பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் அவர்களது குடும்பங்கள் கல்விக்காக உதவும் படியும் கல்லூரி அதிபர் நஸ்ரியா முனாஸ் வேண்டிக் கொண்டார்.

new constitution

# சாத்தியமாகுமா புதிய அரசியலமைப்பு?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கையின் அரசியல் வரலாற்றை மாற்றியமைத்து புதிய அத்தியாயம் ஒன்றை எழுதும் வகையில் நாட்டிற்கு பொருத்தமான அரசியலமைப்பொன்றை வரையும் நோக்கில் அரசாங்கம் அரசியலமைப்பு வரைவு குழுவொன்றை நியமிக்க நடவடிக்கைகளை எடுத்திருக் கின்றது. அதற்காக ஒரு குழுவையும் நியமித்திருக்கின்றது. பிரதமர் ஹரினி அமரசூரிய, அமைச்சர்களான பிமல் ரத்நாயக்கா, ஹர்சன நாணயக்கார ஆகியோர் அரசாங்கத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு மேலதிகமாக சட்ட வல்லுனர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கியதாக இந்த குழு அமைந்திருக்கின்றது. இந்த குழு புதிய அரசியல் யாப்பொன்றை வரைவது தொடர்பாக விரிவான கலந்துரையாடல் களை நடத்தி குறிப்பிட்டதொரு காலப் பகுதிக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று அறிய முடிகின்றது. இதன் முதலாவது கலந்துரையாடல் 2026.01.21 ஆம் திகதி நடக்க ஏற்பாடாகி இருந்தது.

ஏற்கனவே அரசாங்கம் அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் அடுத்த கட்டமாக அரசியல் அமைப்பை திருத்தம் செய்வதற்காக அல்லது புதிய அரசியல் யாப்பொன்றை வரைவதற்காக என்ற பின்புல குறிக்கோளை அடிப்படையாக வைத்து இந்த நடவடிக்கையில் இறங்கி இருக்கின்றது. கல்வி மறுசீரமைப்பில் கைவைத்த அரசாங்கம் இந்த மறுசீரமைப்பை அறிவித்தவுடன் அதில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக மற்றும் நாடளாவிய ரீதியில் வெளிப்பட்ட கடுமையான எதிர்ப்பு காரணமாக ஒருபகுதிய மறுசீரமைப்பை 2027 ஆம் ஆண்டு வரையில் பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆறாம் தரத்திற்கான ஆங்கில மொழி பாடநூ லில் (மொடியுலில்) மறைமுகமான முறையில் பாலியல் மற்றும் ஓரினச் சேர்க்கைக்கு வழிகாட்டும் இணையத்தள முகவரியை உட்படுத்தி இருந்த விடயம் பூதாகரமான முறையில் மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகியதால் முழுமையாக அந்த பாடநூலை வாபஸ் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதியில் தவறை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது.

அதேபோன்று அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்த பேரழிவை தடுக்க அரசாங்கம் தவறியது என்ற அடிப்படையில் சட்டத்தரணி ஒருவரால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான காலக்கெடுவாக உயர் நீதிமன்றம் 2026 ஜுலை 15 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கி இருக்கின்றது. கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த சட்டத்தரணியான கீர்த்திபண்டார கிரிதேன என்வரால் இந்த குற்றம் சாட்டப்பட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. பேரிடர் சூழ்நிலையை முன்கூட்டியே அறிந்து பாதுகாப்பு முன்னேற்பாடுகளை தடுக்க வேண்டிய அரசாங்கம் அதனைச் செய்ய தவறியதாக குற்றம்சாட்டியே ஜனாதிபதி, பிரதமர் ஹரினி அமரசூரிய, அமைச் சரவை, சட்டமா அதிபர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றை பிரதிவாதிகளாக குறிப்பிட்டே இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்த நெருக்கடியாக பாராளுமன்ற உறுப்பினர்களது ஓய்வூதியத்தை இல்லாதொழிப்பது தொடர்பான சட்டமூலம் ஒன்றை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனை நிறைவேற்ற நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இந்த சட்டமூலத்தை ஆட்சேபித்து மூன்று மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. இந்த விடயத்தை 2026.01.20 ஆம் திகதி சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன பாராளுமன்றத்தில் அறிவித்தார். சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஆலோசனையின் பேரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களில் சட்டமா அதிபர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த சட்டமூலமானது அரசியல் அமைப்பை மீறுவதாக இருக்கின்றது. சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமானால் விஷேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் இந்த சட்டமூலத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப் பட்டுள்ள மனுக்களில் கோரப்பட்டிருக் கின்றது. அத்துடன் அரசாங்கம் இவ்வாறாக சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் தனது அரசியல் எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தில் செயற்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் இந்த சட்டமூல மானது அரசியல் அமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும் அரசியல் அமைப்பின் ஏதாவதொரு பிரிவை திருத்துவதாக அல்லது புதிய சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றுவதாக இருந்தால் அது தொடர்பாக பொருட்கோடல் செய்வதற்கான உரிமையை பெற்றிருப்பது உயர் நீதிமன்றமாகும். அவ்வாறு திருத்தம் செய்ய உள்ள அல்லது சட்டமூலங்கள் அரசியல் அமைப்பின் பிரிவுகளை மீறுவதாக இருந்தால் என்ன செய்ய வேண்டும்? சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதா அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமா? அதே நேரம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா என்ற விடயங்கள் தொடர்பாக தீர்ப்பு வழங்கும் பொறுப்பும் முற்றாக உயர்நீதிமன்றத்திற்கு உரியதாகும். ஆனாலும் ஏதாவதொரு சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்பின் அடிப்படையி லேயே அரசாங்கம் அதற்கு திருத்தங்களை முன்வைப்பதும் சட்டமூலத்தை நிறைவேற்றாதிருப்பதும் தங்கி இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் இல்லாதொழிக்கப்பட்டால் ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வருகின்ற 600 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற மாதாந்த கொடுப்பனவான 60,000 ஷரூபா வரையான ஓய்வூதியத்திற்கு வெட்டு நடப்பதோடு இனி எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஓய்வூதியம் இல்லை.

இவ்வாறான ஒரு நிலையில் இலங்கைக்கு பொறுத்தமானதொரு புதிய அரசியல் யாப்பை வரைவதற்காக சிபாரிசுகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் நடவடிக்கைள் ஆரம்பிக்கப்பட்டு கட்டம் கட்டமாக கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டி இருக்கின்றது. இருக்கின்ற அரசியல் அமைப்பில் அரசுக்கு தேவைவப்படும் பிரிவுகளை திருத்தம் செய்வதா அல்லது நடை முறையில் இருந்து வரும் 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பை முற்றாக தலைகீழாக மாற்றியமைத்து புதியதொரு அரசியல் யாப்பை வரைந்து மூன்றாவது குடியரசு அரசியல் யாப்பாக வழங்குவதா என்று பொருத்திருந்தே பார்க்க வேண்டும். பிரதானமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது, வடக்கில் இருந்து எழுகின்ற அதிகார பங்கீட்டு கோரிக்கைக்கு வாய்ப்பளித்து மதச்சார்பற்ற நாடு என்ற அடிப்படையில் எல்லா இனங்களுக்கும் பொருந்தும் வகையில் புதிய அரசியல் வியாக்கியானத்துடன் புதுமைகளை உள்ளடக்கிய யாப்பாக கொண்டு வருவதா என்ற விடயங்களை காலப்போக்கிலே அறிந்துகொள்ள முடிகின்றது.


இவ்வாறு பார்க்கின்ற போது அரசியல் அமைப்பை மாற்றியமைக்கும் முயற்சி புதிய விடயமாக இல்லை என்பதை வரலாற்றை புரட்டுகின்ற போது அறிய முடிகின்றது. 1996 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் இந்த முயற்சியில் இறங்கி தோல்வி கண்டார். பின்னர் 2016 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நல்லாட்சி அரசு காலத்திலும் மைத்திரிபால சிறிசேனாவும் இதே முயற்சியில் இறங்கி தோல்விகளை சந்தித்தார். மூன்று நாட்களாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்ட பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்படாமலே விவாதம் ஒத்திப் போடப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட சந்தேகம், குழப்ப நிலை மற்றும் பெரும்பான்மை சமூகத்தில் இருந்து கிளம்பிய எதிர்ப்பே இவ்வாறு புதிய அரசியலமைப்பு முயற்சி தோல்வியடைய காரணமாக அமைந்தது. ஆனாலும் இடைக்கிடை அவ்வப்போது தேவைப்படும் சந்தர்ப்பங்களில் திருத்தங்களை செய்ய முடிந்திருக்கின்றது. அந்த வகையில் இதுவரையில் 22 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அந்த 2017 ஆம் ஆண்டு நல்லாட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்த முயற்சி பூர்த்தி செய்யப்பட்டு இடைக்கால அறிக்கை யொன்றும் தயார்படுத்தப்பட்டது. இடைக்கால அறிக்கையானது பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டதாகும். பொதுமகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலித்துள்ள குறித்த கருத்துக்களைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்ட 21 பேர்களைக் கொண்ட குழு மிகவும் முக்கியமான 19 விடயப்பரப்புகளின் அடிப்படையில் சில மும்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் செய்திருந்தது. பொதுமக்களால் குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அந்தந்த விடயத்தின் கீழ் உப தலைப்புக்களை வழங்கி 22 அத்தியாயங்களில் 321 பக்கங்களில் இந்த இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தலைவர்கள், சங்கங்கள், பொதுமக்கள் உட்பட பல்வேறு பட்ட தரப்பையும் சேர்ந்த 3379 பேர்களிடம் இருந்து நேரடியாகவும் மறை முகமாகவும் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்று தயாரிக்கப்பட்ட அறிக்கையின் 197 ஆம் பக்கத்தில் இருந்து 305 ஆம் பக்கம் வரையில் கருத்துக்களை வழங்கிய தனிநபர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்ப் பட்டியல் இடம்பெறுகின்றது. சிரேஷ்ட சட்ட வல்லுனர் லால் விஜேநாயக்காவின் தலைமையிலான குழு மும் மொழிவுகளை செய்து இடைக்கால அறிக்கையாக அன்றைய நல்லாட்சி அரசுக்கு வழங்கி இருந்தது.

குறிப்பாக அரசியல் அமைப்பில் என்ன வகையான மாற்றங்கள் செய்யப்பட்டது என்று கவனித்த போது அப்போதைய தேவைக்கு எற்ப அத்தியாயம் 4 இல் பிரிவு 4.2 இல் பௌத்தத்தை அரச மதமாக ஏற்றிருப்பதோடு எல்லா மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என்ற விடயம் முன்வைக்கப் பட்டிருக்கின்றது. பிரிவு 4.2 (ஐ) இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக இருக்கும் என்ற விடயம் உட்படுத்தப்பட்டிருந்தது அதே நேரம் ஒற்றை ஆட்சி தத்துவம் மாற்றப்படவில்லை. உப ஜனாதிபதி, உப பிரதமர் பதவிகள் என்ற விடயம் உட்படுத்தப் பட்டிருக்கன்றது. இந்த உப பதவிகள் ஜனாதிபதியாகவும் பிரதமரா கவும் வரும் இனத்தைச் சாராதவர்களுக்கான பதவிகள் என்ற அம்சம் உட்படுத் தப்பட்டிருந்தது. இந்த பதவிகள் சிறுபான்மை இனங்களை திருப்திப்படுத்து வதற்காக செய்யப்பட்டுள்ள சிபாரிசுகளாகவே காண முடிந்தது அத்துடன் பாராளுமன்ற த்தில் மேல் சபை, கீழ் சபை என்ற விடயமும் உட்படுத்தப் பட்டிருந்தது. இதில் இரண்டாவது சபையான கீழ் சபையில் மாகாண மட்டங்களில் இருந்து பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில், சில விடயங்களிலான மசோதாக்கள் அங்கீகாரம் பெறுவதற்கு கீழ் சபையினதும் ஒப்புதல் தேவைப்படும் நிலை முன்வைக்கப் பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும் அந்த இடைக்கால அறிக்கை பின்னர் கிடப்பில் போடப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியிலும் இப்படியான முயற்சி எடுக்கப்பட்டு 18 ஆவது திருத்தத்தில் அவருக்கு தேவையான விடயங்களை உட்புகுத்தி புதிய திருத்தம் கொண்டுவரப்பட்டது. பின்னர் 2015 - 2019 நல்லாட்சி காலப்பகுதியில் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு மஹிந்த ராஜபக்ஷ வால் உட்புகுத்தப்பட்ட விடயங்கள் நீக்கப்பட்டு மற்றுமொரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்த அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அரசின் புதிய அரசியல் அமைப்பு அல்லது அரசியல் அமைப்பிற்கான திருத்தமாக வரும்போது என்ன விடயங்களை உட்புகுத்தி, இருக்கின்ற யாப்பில் எந்த விடயங்களை தேவையற்றவை என்று தூக்கி வீசி, புதிய கல்வி மறுசீரமைப்பு போன்று புதிய அரசியல் யாப்பாக கொண்டு வரும் முயற்சியில் இறங்குமோ என்ற விடயத்தை நிதானமாக இருந்து அவதானிப்பதன் மூலமே அறிய முடிகின்றது.



# வடமத்திய பொதுச் சேவை ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கிய ஆளுனர்

(எம்.ரீ.ஆரிப் )

வடமத்திய மாகாண பொதுச் சேவை ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச வழங்கி வைத்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரியான சந்திரா கருணாரத்ன மாகாண பொது சேவை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.





இலங்கை நிர்வாக சேவையில் சுமார் 34 ஆண்டுகள் மத்திய அரசு மற்றும் மாகாண பொது சேவையில் பல பதவிகளை வகித்த ஒரு சிரேஷ்ட அதிகாரியான இவர் வடமத்திய மாகாண சபையில் பல அமைச்சகங்களுக்கு செயலாளராகவும் மாகாண பொதுச் சேவை ஆணையத்தின் செயலாளராகவும் மாகாண ஆளுநரின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

ஒய்வு பெற்ற பின்னர் சுமார் 06 ஆண்டுகள் விவசாய திணைக்களத்தின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரிகளான ஆர்.கே.பிரேமசிறி , சட்டத்தரணி ஆர். ஏ. எல். பி. விஜேசிறி , ரணசிங்க மற்றும் வைத்தியர் எச்.கருணாதிலக ஆகியோர் மாகாண பொதுச் சேவை ஆணையத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் போது வடமத்திய மாகாண பிரதான செயலாளர் ரஞ்சன ஜயசிங்க, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பி.எஸ்.விமலவீர உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# சவளக்கடை விக்னேஸ்வரா மற்றும் வாணி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு





(ஏ.எச்.எம். ஹாரீஸ்)

சவளக்கடை விக்னேஸ்வரா மற்றும் வாணி பாலர் பாடசாலைகளின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் அவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் (25) சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரும், நளீர் பவுண்டேசன் நிறுவனத்தின் ஸ்தாபத் பணிப்பாளரும். ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித் தலைவருமான எம்.ஏ.நளீர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

புதிய மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் அவர்களுக்கு தேவையான பாடசாலை புத்தகப் பைகள், அப்பியாச கொப்பிகள் போன்ற கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் முன்னணியின் செயலாளர் யோகநாதன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜஹான், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் இடம்பெறவுள்ள 'சுவர்க்கத்தை நோக்கிய பாதை' வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆன்மீக விழிப்புணர்வு மாநாடு




புனித அல்குர்ஆனின் வழி காட்டல்கள் மற்றும் அறிவியல் ரீதியான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு, சமூகத்தில் ஒரு பாரிய ஒழுக்கவியல் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சுவர்க்கத்தை நோக்கிய பாதை - குர்ஆனும் அறிவியலும் எனும் விசேட மாநாடு எதிர்வரும் 2026 பெப்ரவரி 01 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளரங்கத்தில் நடைபெறவுள்ளது.

மனிதாபிமான நிவாரண நிறுவனம் பஜ்ர் கவுன்சில் மற்றும் கொலன்னாவ மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து இந்நாடளாவிய ரீதியிலான முன்னெடுப்பை ஏற்பாடு செய்துள்ளன.

இலங்கையில் முதன்முறையாக இத்தகைய பிரமாண்டமான முறையில் நடத்தப்படும் இந்த மாநாடு, ஆன்மீக மறுமலர்ச்சி, தார்மீகப் பொறுப்புணர்வு மற்றும் நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை முறையை சமூகத்தில் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இம்மாநாட்டில் நாட்டின் புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சமூகத் தலைவர்களான டாக்டர் அலி பின் அப்துல் காதிர், அஷ்-ஷெய்க் ஹம்ஸா வர்தக், அஷ்-ஷெய்க் அகார் மொஹம்மத், அஷ்-ஷெய்க் அர்க்கம் நூராமித், அகில இலங்கை ஜமிய்யத்துல் உலமா, சகோதரர் நபீல் ஹம்ஸா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இன்றைய நவீன உலகில் தனிநபர்களும், குடும்பங்களும் எதிர்கொள்ளும் சமகால சவால்கள் குறித்து புனித குர்ஆனின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இவ்வமர்வுகள் அமையும்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு 3,500 பேர் அமரக் கூடிய வசதி கொண்ட முழுமையாக குளிரூட்டப்பட்ட கொழும்பு சுகததாச உள்ளரங்கத்தில் நடைபெறும்.

15 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாரும் இதில் கலந்து கொள்ள முடியும் என்பதுடன், பெண்களுக்காக பிரத்தியேக அமர்வு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வின் முக்கிய நோக்கங்களாக, அல்லாஹ்வின் வசனங்களைத் தாங்கி நிற்கும் இதயங்களைக் கௌரவித்தல், குர்ஆனின் வழிகாட்டுதலிலிருந்து விலகிய இதயங்களை மீண்டும் இணைத்தல், நாட்டிற்குச் சேவை செய்யக்கூடிய பொறுப்புள்ள பிரஜைகளை உருவாக்குதல் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளது

ஆர்வமுள்ளவர்கள் உத்தியோக பூர்வ Google Form ஊடாக தமது விருப்பத்தைப் பதிவு செய்யலாம். எனினும், இது ஆசன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தாது என்பதால், அன்றைய தினம் முன்கூட்டியே வருகை தந்து ஆசனங்களை உறுதிப்படுத்துமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நற்பண்புகள் நிறைந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்னெடுக்கப்படும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்








(கே.எ. ஹமீட் )

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ.நஸீலின் ஏற்பாட்டில் அபிவிருத்தி குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தலைமையில் பொத்துவில் பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.அப்துல் வாசித், கே.கோடிஸ்வரன், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எம்.எம்.முஷாரப், கணக்காளர் எஸ்.எப்.சபானா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம்.எம்.சப்ரி, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# அனர்த்தங்களும் ‘கழா கத்ர்’ நம்பிக்கையும்



அஷ்ஷைக் பளீல் (நளீமி)




**பகுதி -04**
**‘அனர்த்தங்கள் ஓர் இஸ்லாமிய பார்வை’**

**(கடந்த வார தொடர்...)**

இந்த ஆக்கத்தை பின்வரும் தகவலோடு ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும்: 1990 களுக்கும் 2002 இடைப்பட்ட காலத்தில் துருக்கிய பொறியாளர் ஈதூன் தூர்ஷுன் நிர்மாணித்த 50ற்கு மேற்பட்ட தொடர்மாடி வீட்டுத் தொகுதிகள் எதுவும் 2023ல் துருக்கியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தைத்தால் பாதிக்கப்படவில்லை. அதாவது நிலநடுக்கத்துக்கு தாக்குப் பிடிக்கும் வகையில் அவை நிர்மாணிக்கப் பட்டிருந்தன.

அப்படியாயின் மனித முயற்சிகளால் அனர்தங்களைத் தவிர்க்க முடியுமா என்ற வினாவுக்கு இந்த ஆக்கம் விடை தேடுகிறது. பொதுவாக அனர்த்தங்கள் ஏற்படுகின்ற பொழுது அவை அல்லாஹ்வின் ஏற்பாடுகள் என்று நாம் அழுத்தமாகக் கூறுகின்றோம். அது எந்தவகையிலும் மறுக்க முடியாத அடிப்படையான உண்மையாக இருப்பதுடன் இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாட்டின் ஆறு தூண்களில் அதுவும் ஒன்றாகும். அதனை மறுப்பவர் இஸ்லாத்தின் வட்டத்துக்குள் இருந்தே வெளியே போகின்றார்.

பிரபஞ்சத்தில் எது நிகழ்ந்தாலும் அல்லாஹ்வின் நாட்டுப்படியே நடக்கும் என்பதே அந்த நம்பிக்கையின் சாரம்சமாகும்.

ஆனால், அல்லாஹு‘தஆலா தனது நாட்டங்களை மனித முயற்சிகளுடனும் சம்பந்தப்படுத்திருக்கின்றான். மனித முயற்சிகள் கட்டாயம் தேவை என்று அவன் வலியுறுத்தியுமிருக்கின்றான். முன்னைய நபிமார்களும் நபி(ஸல்) அவர்களும் சஹாபாக்களும் பின்வந்த இமாம்களும் நல்லடியார்களும் தம்மால் இயன்ற அளவு முயற்சிகளை செய்த பின்னர் தான் அல்லாஹ்விடத்தில் ‘தவக்குல்’(பொறுப்புச் சாட்டல்) வைத்தார்கள். மாறாக எவ்வித முயற்சிகளையும், முன்னேற்பாடுகளையும் செய்யாமல் அவர்கள் வெறுமனே இருந்து விடவில்லை. அத்தகைய முயற்சிகளை உச்சகட்டமாக மேற்கொண்ட பின்னரும் நாம் விரும்பாத ஏதும் நடக்குமாயின் அதுதான் அல்லாஹ்வின் நாட்டம், ஏற்பாடு, முடிவு என்ற திருப்தியுடன் இருந்தார்கள் என்ற உண்மையை நாம் தெளிவாகப் புரிந்திருப்பது அவசியமாகும். அந்தவகையில் அனர்த்தனங்களை ‘கழா கத்ர்’ உடன் தொடர்புபடுத்தி நோக்குவது அவசியமாகும். கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் நாம் தற்போதும் எதிர்காலத்திலும் மேற்கொள்ள வேண்டும் என அல்லாஹ் கூறியுள்ள ஏற்பாடுகளையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

(அ) பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் எழுதப்பட்டும் பதிவுசெய்யப்பட்டும் உள்ளன:

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வால் முன்கூட்டியே எழுதப்பட்டும் பதிவுசெய்யப்பட்டும் உள்ளன என்பது ஒரு முஸ்லிமின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றாகும். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அந்த எழுத்தின் விதம் என்ன, அது எழுதப்பட்டுள்ள அந்தப் புத்தகத்தின் இயல்பு என்ன என்பதை நாம் அறியாதபோதிலும், அல்லாஹ் உயர்ந் இந்தப் பிரபஞ்சத்தை அதன் பூமி, வானம், உயிரற்றவை, உயிருள்ளவை அனைத்தையும் தன்னிடத்தில் இருக்கும் அளவீட்டின்படி உருவாக்கியுள்ளான். அவன் அனைத்தையும் தனது அறிவால் சூழ்ந்திருக்கிறான் அனைத்தையும் எண்ணிக்கையுடன் பதிவு செய்துள்ளான். இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் நிகழும் ஒவ்வொன்றும் அவனது அறிவினடியாகவும் சித்தத்தின் படியுமே நிகழ்கிறன என்பதே ‘களா கத்ர்’ நபிக்கையின் சாரம்சமாகும்.

அல்லாஹ் குர்ஆனில் “உங்கள் இறைவனிடமிருந்து பூமியிலோ வானிலோ ஒரு அணுவின் எடைக்குச் சமமானதும் கூட மறைவதில்லை அதைவிடச் சிறியதோ பெரியதோ எதுவும் தெளிவான ஒரு பதிவேட்டில் இல்லாமல் இல்லை” (யூனுஸ் 61)என்றும்,

“ஒரு இலை விழுந்தாலும் அவன் அதை அறியாமல் இல்லை பூமியின் இருள்களில் உள்ள ஒரு விதையும் கூட, ஈரமானதோ உலர்ந்ததோ எதுவும் தெளிவான ஒரு பதிவேட்டில் இல்லாமல் இல்லை” (அல்-அன்ஆம் 59).என்றும்

“பூமியிலோ, உங்கள் உயிர்களிலோ ஏற்படும் எந்தத் துன்பமும், நாம் அதை உருவாக்குவதற்கு முன்பே ஒரு பதிவேட்டில் இல்லாமல் இல்லை நிச்சயமாக இது அல்லாஹ்விற்கு எளிதானதே” (அல்-ஹதீத் 22) என்றும் கூறுகிறான்.

(ஆ) அல்லாஹ்வின் இந்த முழுமையான அறிவும், துல்லியமான கணக்கீடும், சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்பே அவன் அனைத்தையும் பதிவு செய்திருப்பதும், மனிதன் வாழ்வில் முயற்சிகளைச் செய்வதற்கும் , செயல்படுவதற்கும் எவ்வகையிலும் தடையாக இருப்பதில்லை. ஏனெனில், அல்லாஹ் விளைவுகளை எழுதிவைத்திருப்பது போலவே அவற்றுக்கான காரணங்களையும் எழுதிவைத்துள்ளான் தனது முடிவுகளை நிர்ணயித்தது போலவே முன்னோடிகளையும்-முன்னேற்பாடுகளையும் நிர்ணயித்துள்ளான். ஒரு மாணவனுக்கு வெற்றியை மட்டும் எந்த வழியிலேயும் அடையலாம் என்று அவன் எழுதவில்லை மாறாக, உழைப்பு, ஆர்வம், கவனம், விழிப்புணர்வு, பொறுமை, தாங்கும் வலிமை போன்ற வழிகளின் மூலம் மட்டுமே வெற்றியை எழுதுகிறான். இதுவும் எழுதப்பட்டதே் அதுவும் எழுதப்பட்டதே. ‘காரண காரிய விதி’யை அல்லாஹ் உலகில் செயல்படுத்துகிறான். முழுப்பிரபஞ்சமும் அதனால் பிணைக்கப் பட்டிருக்கிறது. ஒரு பொருளை நாம் மேலே வீசினால் அது கீழ்நோக்கி வருவது,நெருப்பு சுடுவது, கிருமிகள் உடலுக்குள் நுழைந்தால் உடல் நோய்வாய்ப்படுவது என்பன காரண காரிய விதிகளுக்கான சான்றுகளாகும். காரணங்களை கடைப்பிடிப்பது விதி(கத்ர்)க்கு முரணானது அல்ல் மாறாக அதுவும் கதரின் ஒரு பகுதிதான். அதனால் தான் நபி(ஸல்) அவர்களிடம், மருந்துகள் மற்றும் தீங்குகளைத் தவிர்க்கும் காரணங்கள் அல்லாஹ்வின் விதியைத் திருப்பிவிடுமா என்று கேட்கப்பட்டபோது, அவர்கள் “அவையும் அல்லாஹ்வின் விதியில் ஒரு பகுதி தான்” (அஹ்மத், இப்னு மாஜா, திர்மிதி ஹஸன்).எனத் தெளிவாகக் கூறினார்கள்.

ஷாம் பிரதேசத்தில் தொற்று நோய் பரவியபோது, உமர்(ரலி) அவர்கள் சகாபாக்களின் ஆலோசனையுடன் அங்கு போகாமலிருக்க முடிவு செய்தார்கள். அப்போது, “அல்லாஹ்வின் விதியிலிருந்து தப்பி ஓடுகிறீர்களா?” என்று கேட்கப்பட்ட போது, “ஆம், அல்லாஹ்வின் விதியிலிருந்து அல்லாஹ்வின் விதிக்கே தப்பி ஓடுகிறோம். இரண்டு நிலப்பகுதிகளுக்கு நீங்கள் செல்வதாக வைத்துக் கொள்வோம். ஒன்று வளமானது, மற்றொன்று வறண்டது. வளமான நிலத்தில் நீங்கள் உங்கள் கால்நடைகளை நீங்கள் மேய்த்தாலும் அல்லாஹ்வின் விதிதான் வறண்ட நிலத்தில் மேய்த்தாலும் அதுவும் அல்லாஹ்வின் விதியால் தான் அல்லவா?”எனக் கூறினார்கள்.

(இ) கத்ர் என்பது நமக்குப் மறைக்கப்பட்ட மறைபொருள்:

ஒரு விஷயம் நிகழ்ந்த பிறகே அது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிகிறோம்.ஆனால், அது நிகழ்வதற்கு முன், பிரபஞ்சச் சட்டங்களை(விதிகளை)யும், மார்க்க வழிகாட்டுதல்களையும் பின்பற்றி, நம் மார்க்கத்திற்கும் உலகியலுக்கும் பயன்களைத் தேடும்படிதான் நாம் பணிக்கப்பட்டுள்ளோம்.

“மறைவான விடயங்கள்(கைப்) என்பன உலகங்களின் இறைவன் மனிதர்களின் கண்களிலிருந்து பாதுகாத்து வைத்த ஒரு நூல் நிகழ்காலத்தின் ஒரு பக்கமே மக்களுக்கு அதிலிருந்து இடையிடையே வெளியே வருகிறது” என ஒரு கவிஞர் கூறினார்.

அல்லாஹ்வின் பிரபஞ்சச் சட்டங்களும் மார்க்கச் சட்டங்களும், காரணங்களைப் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை எமக்குக் கட்டாயமாக்குகின்றன. அல்லாஹ்வின் தீர்ப்பிலும் விதியிலும் மிக வலுவான நம்பிக்கை கொண்டிருந்த நபி(ஸல்) அவர்கள் இதை நடைமுறைப்படுத்தினார்கள். அன்னார் எச்சரிக்கையுடன் நடந்தார்கள் படைகளைத் தயார் செய்தார்கள் யுத்தம் நடக்க முன்னர் முன்னோடிக் குழுக்களையும் உளவாளிகளையும் அனுப்பினார்கள் போராட்டத்தின் போது இரண்டு மார்புக் கவசங்களையும் தலைக் கவசத்தையும் அன்னார் அணிந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும் பள்ளத்தாக்கின் வாயிலில் வில்லாளர்களை நிறுத்தினார்கள் மதீனாவைச் சுற்றி அகழி தோண்டினார்கள் ஹப்ஷாவிற்கும் மதீனாவிற்கும் ஹிஜ்ரத் செய்ய தனது தோழர்களுக்கு அனுமதி வழங்கியது மட்டுமன்றி தாமும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள் தனது ஹிஜ்ரத் பயனத்தின் போது முழுமையான முன்னெச்சரிக்கைகளை அவர்கள் மேற்கொண்டமையும் கவனிக்கத்தக்கதாகும். ஹிஜ்ரத் பயணத்தின் போதான அன்னாரது ஏற்பாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மூலோபோபாயத் திட்டங்களும் வரலாற்றுப் பிரசித்தமானவை. அந்தவகையில் ஹிஜ்ரத்துக்கான பயண மிருகங்களைத் தயார் செய்ததுடன் பொருத்தமான வழிகாட்டியையும் தெரிவு செய்து கொண்டார்கள். அன்னார் குகையில் மறைந்திருந்தமை, பயணத்தின் போது தேவைப்படும் உணவு, பானம் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டமை , மக்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்குப் போகும் பாதை அல்லாத வழமைக்குப் புறம்பான பாதையை பயணத்துக்காக அன்னார் தெரிவு செய்தமை போன்ற ஏற்பாடுகள் திட்டமிட்டு அப்பயணம் மேற்கொள்ளபபட்டமைக்கான சான்றாகும்.

வானத்திலிருந்து தனக்கு நேரடியாக உணவு இறங்கும் என்று அன்னார் காத்திருக்கவில்லை. எனவே, உமர்(ரழி)அவர்கள் “நபி(ஸல்) அவர்கள் தனது குடும்பத்திற்கு ஓர் ஆண்டிற்கான உணவைச் சேமித்து வைத்தார்கள்” புஹாரி(5357), முஸ்லிம் (1757) எனக் கூறினார்கள்.

“ஒட்டகத்தை கட்டிவிட்டு அல்லாஹ்வில் நம்பிக்கை வைய்” என்று ஒருவருக்குக் கூறினார்கள்” (துக்ரீஜ் இப்னு ஹிப்பான்:731)

“சிங்கத்திடமிருந்து தப்பியோடுவது போல குஷ்டரோகியிடமிருந்து தப்பியோடு” (புஹாரி: 5707 ,முஸ்லிம்: 2220) என்றும், தொற்றைத் தவிர்ப்பதற்காக, “நோயுற்ற மிருகங்களை ஆரோக்கியமான மிருகங்களுடன் கலக்க வேண்டாம்” (முஸ்லிம்: 2221,இப்னு ஹிப்பான் :6115)” என்றும் கூறினார்கள்.

(ஈ) ‘கழா கத்ர்’ இல் நம்பிக்கை வைத்திருப்பது, நாம் விரும்புவதை அடைந்துகொள்ளவும் விரும்பாததை தவிர்க்கவும் முயற்சி செய்வதற்கு எதிரானது அல்ல.எனவே சோம்பேறியும் அலட்சியமானவனும், தனது பாரங்களையும் தவறுகளையும் கத்ரின் மீது சுமத்த முடியாது. அது இயலாமைக்கான சான்று பொறுப்பிலிருந்து தப்பும் முயற்சி.

அல்லாமா இக்பால்: “பலவீனமான முஸ்லிம் அல்லாஹ்வின் தீர்ப்பும் விதியுமே காரணம் எனக் கூறுகிறான் ஆனால், வலிமையான முஸ்லிம் தன்னை தடுக்க முடியாத அல்லாஹ்வின் தீர்ப்பாகவும், வெல்ல முடியாத அவனது விதியாகவும் நம்புகிறான்.” எனக் கூறினார்.

முதல் தலைமுறை முஸ்லிம்களும் இதையே நம்பினர். இஸ்லாமிய வெற்றிப் போர்களின் போது முகீரா இப்னு ஷுஃபா (ரழி) அவர்களிடம், ரோமப் படைத்தளபதி ‘நீங்கள் யார்’ என வினவிய போது, முகீரா:“நாங்கள் அல்லாஹ்வின் விதி அல்லாஹ் உங்களை எங்களால் சோதித்தான். நீங்கள் மேகத்தில் இருந்தாலும் நாங்கள் உங்களிடம் ஏறி வருவோம்.அல்லது நீங்கள் எங்களிடம் இறங்கி வருவீர்கள்!”எனக் கூறினார்.

மனிதன் தன் முழு முயற்சியையும் செய்த பின்பே, “இது அல்லாஹ்வின் தீர்ப்பு” என்று கூற வேண்டும். நபி(ஸல்) முன்னிலையில் இருவர் தீர்ப்பளிக்கக் கொண்டுவரப்பட்டு அவர்களில் ஒருவருக்கு எதிராக தீர்ப்பு அமைந்த போது அவர் ,“ஹஸ்பியல்லாஹ் வ நிஃமல் வகீல்”(எனக்கு அல்லாஹ் போதுமானவன்.அவன் சிறப்பாக பொறுப்பை ஏற்பவன்) என்றார். அதனைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள் “அல்லாஹ் இயலாமையைப் கண்டிக்கிறான் புத்திசாலித்தனமாக செயல்படு (அதன் பின்)ஏதாவது உன்னை மீறி நடந்தால், ‘ஹஸ்பியல்லாஹ் வ நிஃமல் வகீல்’ என்று சொல்” என்றார்கள். (அஹ்மத்:23983, அபூதவுத்: 3627) அவரது பக்கம் தோற்றுப் போவதற்கு அவரே காரணமாக அமைந்து விட்டு அது அல்லாஹ்வின் ஏற்பாடு என நினைத்தமை நபிகளாரின் கண்டிப்புக்குக் காரணமாகும். எனவே, எமது காரியங்களில் நாம் விழிப்புடன் இருப்பது, திட்டமிடுவது நலன்களைக் கண்டறிவது ஒரு செயலின் பின் விளைவுகளை அறிய சிந்தனையைப் பயன்படுத்துவது என்பவற்றின் அவசியத்தை மேற்படி சம்பவம் உணர்த்துகிறது.

**(உ) கதரும் தீர்ப்பிலும் நம்பிக்கையின் பயன்:**

மனிதன் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து விட்டு , அல்லாஹ்வின் புறத்திலிருந்து வர இருப்பவற்றிற்காகக் காத்திருக்கும் போது, இந்த நம்பிக்கை அவனுக்கு நம்பிக்கையின்மையின் தருணத்தில் உறுதியையும், போராட்டத்தில் உற்சாகத்தையும், ஆபத்து நேரத்தில் தைரியத்தையும், அதிர்ச்சியில் பொறுமையையும், உலகியலான வாய்ப்புகள் வித்தியாசப்பட்டாலும் ஹலால் சம்பாதிப்பில் திருப்தியையும் அளிக்கும்.

ஒரு முஸ்லிம் போராட்டத்தின் போது: “அல்லாஹ் எங்களுக்கு எழுதியதைத்தவிர வேறு எதுவும் எங்களைத் தாக்காது.”எனக் கூறுவான்.அவன் தனது எதிரிகளைப் பார்த்து : “யார் மீது போராட்டம் விதியாக்கப்பட்டதோ அவர்கள் நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்திருந்தாலும் உங்கள் படுக்கைகளுக்கே வந்திருப்பார்கள்” (ஆல் இம்ரான் 154). எனக் கூறுவான்.

துன்பத்தின் போது அவன்: “இது அல்லாஹ்வின் தீர்ப்பு் அவர் விரும்பியதே நடந்தது” என்றும் கூறுவான்.

அநியாயக்கார அரசரிடம் அவன்: “என் ஆயுளை நீளமாக்க உன்னால் முடியாது எனக்கென உள்ள ரிஸ்கை விட்டும் என்னை உன்னால் ஒரு போதும் தடுக்க முடியாது.” எனக் கூறுவான். களா கத்ரின் நம்பிக்கை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டால், அது நம் சமூகத்தை உறுதியான, போராடும், வரலாற்றின் தலைமையை ஏற்கத் தகுதியான சமூகமாக மாற்றும்.

## அனர்த்தங்களுக்கு மனித செயல்கள் காரணமா?

இப்போது மீண்டும் இயற்கை அனர்த்தங்களுக்கும் களா கத்ருக்கும் இடையிலான தொடர்பு பற்றி நோக்குவோம்.

இங்கு உதாரணத்திற்காக 2023ல் துருக்கியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தை பற்றிப் பேசலாம்.அதில் சுமார் 60,000 பேர் உயிரிழந்து,157 பில்லியன் டொலர் சேதமும் ஏற்பட்டது. நில நடுக்கத்தைத் தொடர்து செய்யப்பட்ட ஆய்வுகளின் போது துருக்கிய பொறியாளர் ஈதூன் தூர்ஷுன் 1990 ஆம் ஆண்டிற்கும் 2002 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிர்மாணித்த 50ற்கு மேற்பட்ட தொடர்மாடி வீட்டுத் தொகுதிகள் எதுவும் அந்த நில நடுக்கத்தால் பாதிக்கப் படவில்லை என்றும் நிலநடுக்கத்துக்கு தாக்குப் பிடிக்கும் வகையில் அவை நிர்மாணிக்கப்பட்டிருந்தததாகவும் தெரியவந்துள்ளது.

இந்த புவி நடுக்கம் தொடர்பில் கட்டுமானப் பொறியாளர்கள் நிறுவனத்தால் (Institution of Structural Engineers) ஓர் ஆய்வு அறிக்கை (Longitudinal study report) வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் கட்டடக்கலை பொறியியல் பேராசிரியரும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கட்டடச் சூழல் இடர் ஆய்வு மையத்தின் (ஊருசுடீநு) இயக்குநருமான பேராசிரியர் எமிலி சோ மற்றும் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் (UCL) பொறியியல் அறிவியல் புலத்தைச் சேர்ந்த டாக்டர் யாசெமின் டிடெம் அக்தாஸ் ஆகியோர் இணைத் தலைமை வகித்தனர்.

பேராசிரியர் எமிலி சோ இவ்வறிக்கையில்: “எங்களது களப்பணி மற்றும் தொலை தூர ஆய்வுகள் இந்த நிலநடுக்க விவகாரத்தில் பல சிக்கல்கள் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளன. இதில் குறைந்த நில அதிர்வுத் திறன் கொண்ட, விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்களின் சிக்கலும் அடங்கும். கட்டிட விதிமுறை இணக்கங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்,” என்று தெரிவித்துள்ளார்.

இலாப நோக்கமானது கட்டுமானத் துறையில் உள்ள அனைவரையும் குறுக்கு வழிகளைப் பின்பற்றத் தூண்டியுள்ளதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. முக்கியமாக வலுவூட்டப்பட்ட கான்கிரீட் (RC) கட்டமைப்புகளால் ஆன கட்டிடங்களே அதிக உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுவப்பட்ட தொழில்நுட்ப அறிவு, நவீன கட்டிட விதிகள் மற்றும் கடுமையான விதிமுறைகள் இருந்தபோதிலும், மிகப்புதிய கட்டிடங்களில் கூட குறைபாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்த ஆய்வின் முடிவுகள் காட்டுகின்றன.

எனவே இதன் வெளிச்சத்தில் நோக்கினால் இலங்கையில் கடந்த காலங்களிலும் அண்மைக்காலத்திலும் இடம்பெற்ற அனர்த்தங்களுக்கு மனிதர்களது பக்கத்தில் இருந்த பலவீனங்களும் கவனயீனங்களும் எவ்வளவு தூரம் பங்களித்துள்ளன என ஆராயப்பட வேண்டும்.

**(முற்றும்)**

# நாட்டைக்கட்டி எழுப்ப நிதியுதவியளித்த பொலன்னறுவை அஜ்வாத் வைத்தியசாலை





(அஹமட் இர்ஷாட்)

"கொண்டாட்டங்களை விடவும் அன்பையும் இரக்கத்தையும் தேர்ந்தெடுப்பதே மேல்" பொலன்னறுவையில் இரண்டு தசாப்தத்திற்கும் மேலாக இயங்கி வரும் வீனஸ் லங்கா (அஜ்வாத்) தனியார் வைத்தியசாலை அவர்களது வருடாந்த விருந்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியுடன் மேலதிக நிதிப்பங்களிப்பையும் சேர்த்து அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக "மீண்டும் இலங்கையை கட்டி எழுப்புவோம்" (Rebuit Sri Lanka) ஸ்ரீலங்கா அறக்கட்டளைக்கு நன்கொடையாக ஒரு தொகைப் பணத்தினை கௌரவ சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்தினவிடம் கையளித்துள்ளனர்.

வைத்தியசாலையின் இஸ்தாபகத் தலைவர் னுச எம்.பி.எம்.அஜ்வாத் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற சபாநாயகருமான ஜகத் விக்ரமரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு "ரீபில்ட் ஸ்ரீலங்கா" நிதிக்காக வழங்கப்பட்ட நன்கொடைத் தொகையினை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொண்டார்.

குறித்த நிகழ்வில் வைத்தியர் அஜ்வாத்தின் மனைவி ஆர்.எம்.கே.பமுனுவ, மகளும் வைத்தியருமான எம்.ஏ.காலிதா, ஏ.ஏ.எம்.மபாஸ் மற்றும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




நுவரெலிய மாவட்டத்தின் கந்தபொல பகுதியில் மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் நிர்மாணித்து க்கான அடிக்கல் நடும் நிகழ்வு பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.தர்காநகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்.மேற்படி பள்ளிவாசலை நிர்மாணித்துக் கொடுக்க அவர் முன்வந்துள்ளார்.

(பீ.எம்.முக்தார்)

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(இஸட்.ஏ.றஹ்மான்
ஒலுவில் விசேட செய்தியாளர்)

ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளி வாசலின் பைத்துல் மால் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) மூலமாக தேசிய தொழிற்திறன் தகுதி (ஏேஞ) சான்றிதழ் கற்கைநெறிகளுக்கான மாணவர் அனுமதி தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு 2026.01.27 ஆம் திகதி மாலை 5 மணியளவில் ஒலுவில் பெரிய ஜு/ம்ஆ பள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் பல மாணவர்கள், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு விரிவுரையாளர்கள் மற்றும் பைத்துல் மால் உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஓட்டமாவடி பிரதேச சபைக்கு முன்பாக போராட்டம்!



(எச்.எம்.எம். பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்கு முன்பாக போராட்டமொன்று (29) வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதியில் பிரதேச சபை மூலம் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டுவதை நிறுத்தக் கோரியும் அந்தப் பகுதியில் இயங்கி வரும் கோழித்தீன் தொழிற்சாலையின் துர்நாற்றம் தொடர்பாகவும் எதிர்ப்பு தெரிவித்து மஜ்மா நகர் பொதுமக்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டம் நடாத்திய மக்களிடம் பிரதேச சபை தவிசாளர் எம்.எம். எம்.ஹலால்தீன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு குறித்த விவகாரம் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.

## கற்பிட்டி தில்லையூர் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்ற கால் கோள் விழா



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

புதிய பாடத்திட்டத்துடன் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்திற்கு மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்கும் கால் கோள் விழா நிகழ்வு கற்பிட்டி தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் அதிபர் எஸ் எம் அரூஸ் தலைமையில் வியாழக்கிழமை (29) சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக ஓய்வு நிலை அதிபர் ஏ.சீ.எம் முத்தலிப் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக தில்லையடி ஜும்ஆ பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம் டி றிப்கான் (றஹ்மானி) கலந்து கொண்டார். அத்தோடு பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முதலாம் தரத்திற்குரிய பாடத் திட்டத்தை இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ள நிலையில் வளமான நாட்டிற்குள் வளமான கல்வியை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது



அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் 2026 புதிய கல்வி ஆண்டுக்கான முதலாம் வகுப்பு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு அதிபர் ஜே.ஏ.ஆசாத் மொஹமட் தலைமையில் (29) நடைபெற்றது. இதன் போது புதிய மாணவர்களை இரண்டாம் தர மாணவர்கள் அழைத்து செல்வதையும். பிரதம அதிதி பிரதமரின் மேலதிக செயலாளர் ஏ.பி.ஏம்.அஷ்ரப் கௌரவ அதிதிகளான ஜே.ரலீயுதீன் பணிப்பாளர் (பயிற்சி முகாமைத்துவ விருத்தி பயிற்சி அனுராதபுரம்) எஸ்.எம்.சியாத் கல்விப் பணிப்பாளர் (தமிழ் பிரிவு) வடமத்திய மாகாணம் மற்றும் ஓய்வு பெற்ற மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் சமட் உட்பட பலரும் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் :-எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

## அல் அஸ்லாப் நினைவுப் பேருரைகள்

தொடர் ...05

# நீதியரசர் அக்பர்: சட்டம், கல்வி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டின் மலாய் முஸ்லிம் முன்னோடி



'நீதித்துறை, சிறுபான்மை சமூக எழுச்சி மற்றும் பன்மைக் கலாசாரங்களுக்கிடையிலான சகவாழ்வு என்பவற்றுக்கு புதுப்பாதை வகுத்து, இலங்கையின் சட்ட மற்றும் சிவில் அடையாளத்தை உருவாக்க முக்கிய பங்காற்றிய முன்னோடியான நீதியரசர் - சீர்திருத்தவாதி.”

நீதியரசர் மாஸ் தாஜூன் அக்பர் முஊ (1880/1944)இலங்கையின் சட்ட மற்றும் கல்வி வரலாற்றில் ஒரு முன்னோடியான ஆளுமை ஆவார். இலங்கையின் உச்சநீதி மன்றத்தில் பணியாற்றிய முதல் முஸ்லிம் இவரே. கிங்ஸ் கவுன்சில் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாமவரும் இவரே. இவரின் வாழ்க்கை அறிவுத் திறமை, நீதிமன்ற நேர்மை மற்றும் தேசிய சேவைக்கான அர்ப்பணிப்பு என்பவற்றால் தனிச் சிறப்புப் பெறுகிறது. காலனித்துவ இலங்கையில் இருந்து சட்ட, சிவில் தலைமைப் பதவிகள் வரை அவர் செய்த பயணம், அவரது தனிப்பட்ட சாதனைகளை மட்டுமல்ல, நாட்டில் நீதி மற்றும் கல்வியின் பரிணாமத்தையும் பிரதிபலிக்கிறது. சட்டம், கல்வி, சமூகத் தலைமைத்துவம் மற்றும் தேசியக் கொள்கை உள்ளிட்ட துறைகளில் அவர் வழங்கிய பங்களிப்புகள், இன்று வரையிலும் தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும் பெருமைக்குரிய மரபாகத் திகழ்கின்றன.

**ஆரம்ப காலம்**

1880ம் ஆண்டு ஜூன் 15ஆம் தேதி கொழும்பு கொம்பனித் தெருவில் பிறந்த அக்பர், ஒரு முன்னணி மலாய் முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை ஒரு செல்வந்த, தென்னந் தோட்ட உரிமையாளர் என்பதால், உயர்தர கல்வி நிறுவனங்களிலும் சமூகச் சூழலிலும் அவருக்கான நுழைவாயில் உருவானது. அக்பர் குடும்பம் கொழும்பில் வர்த்தக மற்றும் சமூக விவகாரங்களில் செல்வாக்குப் பெற்ற குடும்பமாக விளங்கியது. இவரது மலாய் பாரம்பரியம் அவரது அடையாளத்தையும், முஸ்லிம் கல்வி மற்றும் பிரதிநிதித்துவத்திற்கான உந்துதலையும் உருவாக்கியது.

அவரது தாய் பிந்தாரா குணவிஜயா, தந்தை மாஸ் சுர்மா ஜயா அக்பர், இருவரும் மலாய் வம்சாவளியச் சேர்ந்தவர்கள். இதன் மூலம் அக்பரின் ஆழமான கலாசாரக் கூட்டிணைவு வெளிப்படுகிறது. இலங்கையின் சிறிய மலாய் சமூகம் அவரை தங்கள் சமுதாயத்தின் பெருமையாக நினைத்து, அவரது சாதனைகளை பெருமையுடன் கொண்டாடுகிறது.

அக்பர், கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வி பயின்றார். அங்கு அவரது கல்வித்திறமை சிறு வயதிலேயே வெளிப்பட்டது. லண்டன் மெட்ரிக்குலேக்ஷன் பரீட்சையில் முதற்தரத்தில் தேர்ச்சி பெற்று அதனை உறுதிப்படுத்தினார்.

1897ஆம் ஆண்டில், அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் எம்மானுவேல் கல்லூரிக்கு புலமைப்பரிசில் (Scholarship) பெற்று சேர்ந்தார். ஆரம்பத்தில் இயந்திரவியல் (Mechanical Science Tripos) பாடத்திட்டத்தைத் தேர்ந்தெடுத்து பொறியியலாளராகும் நோக்கத்துடன் தனது கல்விப் பயணத்தைத் தொடர்ந்தார். ஆனால், அவரது அறிவாற்றலும் ஆர்வமும் சட்டத்துறையை நோக்கி அவரை இட்டுச் சென்றன. இதன் விளைவாக 1904ஆம் ஆண்டில் லண்டனில் உள்ள “கிரேஸ் இன்” (Grays Inn) என்ற நான்கு முக்கியமான சட்ட நிலையங்களில் ஒன்றில் சட்டத் துறைப் பணிக்காக இணைந்தார். இதன் மூலம் அவருக்கு சர்வதேச அனுபவமும், தொழில்முறை அங்கீகாரமும் கிடைத்தது.

**நீதித்துறைப் பணிப் பயணம் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள்**

சட்டத் துறையில் முழுமையாக இணையுமுன், அக்பரின் பொறியியல் பின்னணி மற்றும் கேம்பிரிட்ஜ் கல்வி அவரை நிர்வாக மற்றும் கல்வி துறைகளுக்குத் தகுதியானவராக மாற்றியது.

1905ஆம் ஆண்டில் இலங்கைக்கு திரும்பிய பிறகு, அவர் குறுகிய காலத்திற்கு அந்நேரத்தில் பிரதம நீதியரசராக இருந்த சி.பி. லேயர்டின் பிரத்தியேக செயலாளராகப் பணியாற்றினார்.

இந்தப் பணி அவருக்கு காலனித்துவ நீதித்துறையை நேரில் அறியும் வாய்ப்பை வழங்கியது. இதன் மூலமாகவே சட்டச் சீர்திருத்த முயற்சிகளுக்கான அடித்தளமும் அவருக்கு அமைந்தது.

1907ஆம் ஆண்டு, அக்பர் சட்டத் துறையில் உத்தியோகபூர்வமாக சேர்ந்தார். அவர் அட்வொக்கேட் ஜெனரல் துறையில் முடிக்குரிய வழக்கறிஞராக (Crown Counsel) பணியாற்றத் தொடங்கினார்.

அவரது நீதித்துறைப் பதவிகள் வருமாறு:

- 1918 முதல் 1919 வரை கொழும்பு மாவட்ட நீதிபதியாக பணியாற்றினார். இதில் அவர் நடைமுறைத் தெளிவும், நியாயமான தீர்வுகளும் வழங்கியதற்காக பெயர் பெற்றார்.
- 1929 அக்டோபர் 6 அன்று இலங்கை சொலிசிட்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அதே சமயத்தில், C.H. Elphinstone விடுமுறையில் இருந்தபோது, பதில் அட்வொக்கேட் ஜெனரலாகவும் பணியாற்றினார்.
- பின்னர், உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதியரசருக்கு அடுத்த ஸ்தானத்திற்கு உயர்வு பெற்றார். 1936 நவம்பர் 12 அன்று அவர் ஓய்வு பெற்றார்.

இவை அனைத்திற்கும் மேலாக, நீதிபதி அக்பர் காலனித்துவ ஆட்சி காலத்தில் இலங்கை உச்சநீதி மன்றத்தில் பணியாற்றிய முதல் முஸ்லீம் என்ற வரலாற்றுச் சாதனையை உருவாக்கினார். இது நாட்டின் சட்ட வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாக கருதப்படுகிறது.

அக்பரின் சட்ட வாழ்க்கை குறிப்பிடத்தக்க நீதிமன்ற தீர்ப்புகளால் சிறப்புப் பெற்றிருந்தது, அவை தெளிவு, நியாயம் மற்றும் காலனியமும் வளர்ந்து வரும் தேசிய சட்டக் கொள்கைகளுடனும் இணக்கமானவை என புகழ் பெற்றவை. சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் நீதிபதி என்ற பதவிகளில், அவர் நடைமுறை சீர்திருத்தங்களையும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு நீதி கிடைக்கச் செய்யும் முயற்சிகளையும் ஆதரித்தார்.

முஸ்லிம் வாரிசுரிமைச் சட்டம், வக்ஃப் சட்டம் மற்றும் திருமண - விவாகரத்து சட்டங்கள் உருவாக்கத்தில் அவர் முன்னணி வகித்தார். அதேபோல், முன்பாக நீக்கப்பட்டிருந்த, முஸ்லிம் அரசு பணியாளர்களுக்கான ஓய்வூதிய உரிமைகளையும் பெற்றுக் கொடுத்தார்.

கேம்பிரிட்ஜ் கல்வி, நீதிமன்ற திறமை மற்றும் காலனிய நீதித் துறையில் முஸ்லிம் முன்னோடியாக இருந்தமை என்பன அவரைத் திறமை அடிப்படையில் முன்னேற்றம் அடைந்த சின்னமாக உயர்த்தின.

**சட்டமன்றம் மற்றும் உயர் கல்வி**

ஓய்வுக்குப் பிறகு, அக்பர் நாட்டுக்கு சேவை செய்து வந்தார். 1938 மே 7 ஆம் தேதி, அவர் சட்ட மன்ற உறுப்பினராகப் பதவி ஏற்றார். அங்கு அவர் சுதந்திரத்துக்கான முக்கியமான காலகட்டத்தில் சட்ட விவாதங்கள் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் பங்கு பெற்றார். மேலும், பேராதெனிய பல்கலைக் கழகக் குழுவின் நிர்வாகத் தலைவர் ஆகவும் பணியாற்றி, பேராதெனிய பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

1928-இல், எம்.டி. அக்பர் தலைமையிலான குழு, கண்டி அருகே உள்ள தும்பர பள்ளத் தாக்கில் ஒரு வதிவிடப் பல்கலைக்கழகத்தை நிறுவ பரிந்துரைத்தது. ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் போன்ற வளாகமொன்றை அமைப்பது அவர்களது நோக்கமாக இருந்தது. உலகப் போர் காரணமாக 1942-இல் முதலாவது இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பில் நிறுவப்பட்டாலும், 1952-இல் இந்தப் பல்கலைக்கழகம் மகாவலி நதியின் கரையில் உள்ள பேராதெனியவுக்கு மாற்றம் பெற்றதன் மூலம் அவர்களது நோக்கம் நிறைவேறியது. இதன் மூலம் அக்பர் குழுவின் பரிந்துரை நிறைவேறி, பேராதெனிய பல்கலைக்கழகம் இலங்கையின் சிறந்த மற்றும் உன்னத பல்கலைக் கழகமாக மாற முடிந்தது. மேலும், அவர் ஜேம்ஸ் பீரிஸ், மார்கஸ் பெர்னாண்டோ, பொன்னம்பலம் ராமநாதன், சர் டி.பி. ஜெயதிலக போன்ற ஏனைய சமுதாய தலைவர்களுடன் நெருக்கமாக பணியாற்றி, சிங்களவர்கள், தமிழர்கள், மலாயர்கள், பறங்கியர் மற்றும் பிற சமூகங்களிடையே ஒற்றுமை மற்றும் இன நல்லிணக்கத்தை வளர்க்க உதவினார்.

**தலைமைத்துவமும் முஸ்லிம் கல்வியும்**

இலங்கையில் முஸ்லிம்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காக, அவர் கல்வித் தரத்தையும் பண்பாடு மற்றும் மதப் பெறுமானங்களையும் இணைக்கும் நிறுவனங்களை நிறுவினார். நீதியரசர் அக்பர் “இலங்கை முஸ்லிம் கல்வி சங்கம்” என்ற அமைப்பை நிறுவி, பெண்கள் கல்வியை ஊக்குவிக்க ஹூசைனியா மற்றும் ஃபாத்திமா பெண்கள் பாடசாலைகளை அமைத்தார். மேலும், அம்பலாந் தோட்டையில் அக்பர் மகா வித்தியாலயத்தை ஸ்தாபித்தார். 1924-ல் அவர் தலைமையிலான குழு, உத்தியோகபூர்வ பயன்பாட்டில் “முஹம்மதியர்” என்ற சொல்லை “முஸ்லிம்கள்” என மாற்ற பரிந்துரைத்தது. இது முஸ்லிம் சமூகத்தின் கண்ணியத்தை உறுதிப்படுத்தி, மத அடையாளத்துடன் பொருந்தும் சொல்லை வழங்கியது.

கல்வி, மதம் மற்றும் சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் பரஸ்பர தொடர்பைப் புரிந்த சமூகத் தலைவராக அவரது புகழ் நிலைத்துள்ளது. அவர் ஜாவத்த பள்ளிவாசலுக்கு நிலம் தானமாக வழங்கினார். வத்தளை, ஹூனுப்பிட்டியில் உள்ள அக்பர் டவுன் பள்ளிவாசல் அக்பர் தானமாக வழங்கிய நிலத்தில் கட்டப்பட்டது என வாய்வழித் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. பேராதனை பல்கலைக்கழகத்தில், அக்பர் மண்டபம் மற்றும் அக்பர் பாலம் என்பன அவரை கௌரவிக்கும் நோக்கில் பெயரிடப்பட்டு, அந்தப் பல்கலைக்கழகத்தை ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக மாற்றும் அவரது கனவைக் குறிக்கின்றன. கொழும்பில், கொம்பனித்தெருவில் உள்ள நீதியரசர் அக்பர் மாவத்தை என்ற தெரு அவரது பெயரை இன்றும் நினைவுகூரும் வகையில் உள்ளது.

**பாரம்பரியம் மற்றும் தேசிய தாக்கம்**

நீதி அக்பர் தனது வாழ்நாளில் பல விருதுகள் பெற்றார். அவரது சட்டத் திறமையைப் பாராட்டி கிங்ஸ் கவுன்சில் பட்டம் வழங்கப்பட்டது. இது உள்ளூரிலும் சர்வதேச அளவிலும் அவருடைய முக்கியத்துவத்தையும் அவர் பெற்றிருந்த கண்ணியத்தையும் வெளிப்படுத்துகிறது.

இலங்கையின் சட்ட வரலாற்றில் நெறிமுறை சீர்திருத்தத்தின் மற்றும் இனப்பாகுபாட்டுத் தடைகளை உடைத்தெறியும் வகையில், முதலாவது முஸ்லிம் உச்ச நீதிமன்ற நீதியரசராக அவரது நியமனம் ஒரு வரலாற்று மைல்கல்லாகும். இது காலனிய ஆட்சிக்குட்பட்ட காலத்தில் திறமையை அடிப்படையாகக் கொண்டு அடைந்த முன்னேற்றத்துக்குக் கிட்டிய அங்கீகாரமாகும்.

நீதியரசர் மாஸ் தாஜூன் அக்பர் 1944 ஏப்ரல் 22 அன்று காலமானார். நீதியரசர், கல்வியாளர், சமூகத் தலைவர் மற்றும் தேசியப் பற்றாளர் என்ற அரிய தன்மைகளின் இணைப்பை அவருடைய வாழ்க்கையும் பாரம்பரியமும் பிரதிபலிக்கின்றன. நீதிமன்றத்திற்கு அப்பால் அவரது கண்ணோட்டம் கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் சமூக நிறுவனங்களில் விரிந்து பரந்திருந்தது. மத விசுவாசம், கலாச்சாரம் மற்றும் தேசிய முன்னேற்றம் என்பன ஒன்றாக வளர்ந்து வாழ்வதற்கான வழிகளை அவர் உருவாக்கினார். இன, மதம் கடந்து தலைவர்களை ஒன்றிணைத்தும், நாட்டுப்பற்று என்பது மக்கள் சேவையால் மற்றும் நிலைத்திருக்கும் நிறுவனங்களை உருவாக்குவதால் வெளிப்படுவதாக அவர் எடுத்துக் காட்டினார். மலாய் முஸ்லிம் அடையாளத்தில் வேர் கொண்டிருந்தாலும், தேசிய பார்வையில் பரந்து விரிந்தவரான அக்பரின் பங்களிப்புகள் இலங்கை மற்றும் அதற்கு வெளியே இன்னும் மக்களுக்கு உணர்வூட்டுகின்றன. நீதியும், நேர்மையும், மற்றும் ஒற்றுமையும்தான் ஒரு நாட்டின் உண்மையான வலிமையின் அடித்தளம் என்பதை நினைவூட்டுகின்றன.

**தொகுப்பு:முஹம்மத் (SLAS - Rt) அல்-அஸ்லாப் நினைவு மன்றத்தின் பொதுச் செயலாளர்**



**சிரேஷ்ட சட்டத்தரணி மாஸ் யூசுப் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது.**

**நீதிபதி ஆவு. அக்பர்**

# அரசின் புதிய செயற்திட்டமான கல்வி கட்டமைப்புக் குழுவினை அமைக்கும் நிகழ்வு



(எம்.எஸ்.எம். ஸாகிர்)

அரசின் புதிய செயற்றிட்டமான கல்வி கட்டமைப்புக் குழுவினை அமைக்கும் முதல் கட்ட நிகழ்வு கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் பௌதீகவள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றினை மேம்படுத்துதல் எனும் தொனிப் பொருளில் இடம்பெற்றது.

கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கல்முனை வலயத்தின் பிரதிகல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் மற்றும் ஆசிரிய, அதிபர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குருந்தன்குளம் ரன்பத்விலவில் சுகாதார நல்வாழ்வு மையங்கள் திறப்பு




(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

நாடளாவிய ரீதியில் ஐந்தாயிரம் சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்களை திறப்பதற்கான தேசிய திட்டத்திற்கமைய குருந்தன்குளம் மற்றும் ரன்பத்வில ஆகிய இடங்களில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

ஆரம்ப கட்டமாக நாடளாவிய ரீதியில் 42 சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் திறக்கப் பட்டுள்ளது. அவற்றில் இரண்டு அனுராதபுரம் மாவட்டத்தில் முதற் கட்டமாக குருந்தன்குளம் மற்றும் ரன்பத்வில ஆகிய பகுதிகளில் திறக்கப்பட்டுள்ள சுகாதார மையங்களை அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பாக்யா சீ ஹேரத் மற்றும் பி.டி.என்.கே.பலிஹேன ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக மக்களுக்கு தொற்றா நோய்களை கண்டறியும் திட்டம் இல்லாததால் இந்த மையங்கள் திறக்கப்படுவதன் மூலம் அந்த தொற்றா நோய்களை கண்டறிந்து தடுப்பதற்கு தேவையான சிகிச்சை அளிக்கவும் அரசாங்கத்திடமிருந்து நிறைய பணத்தை மிகுதப் படுத்தவும் முடியும். குறிப்பாக நீரிழிவு, புற்றுநோய், குறைந்த இரத்த அழுத்தம், கொழுப்பு மற்றும் சிறுநீரக நோய் போன்ற தொற்றா நோய்களின் நிலைமைகள் இங்கு கண்காணிக்கப்படும். இதன்படி இந்த மையங்களில் மக்களின் சுகாதார நிலை குறித்த தரவு அமைப்பு தயாரிக்கப்பட்டு கணினி மையப்படுத்தப்படும். அதன் ஊடாக குறித்த நோயாளி நாடளாவிய ரீதியில் எந்த மருந்துவ மனையில் சிகிச்சை பெறச் சென்றாலும் அந்த நோய்க் குறிகளை அறிந்து கொண்டு அதற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் போது வடமத்திய மாகாண பிரதான செயலாளர் ரஞ்சன ஜயசிங்க உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முசல்பிட்டி முஸ்லிம் வித்தியாலயத்தின் புதிய அதிபராக நஸூர் கடமை பொறுப்பேற்பு



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி முசல்பிட்டி முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் புதிய அதிபராக எம் என் எம் நஸூர் புதன்கிழமை(28) கற்பிட்டி கோட்டக் வகல்விப் பணிப்பாளர் ஜவாத் முன்னிலையில் அதிகார பூர்வமாக கடமையை பொறுப் பேற்றார்.

இந்நிகழ்வில் முசல்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஏ.எம் அஸ்வத்கான், ஆசிரியர் ஆலோசகர் நபீல், பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்யாலயத்தின் அதிபர் ஏ.எம் ரிஸ்கான் (SLPS) முதலைப்பாளி முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் முசவ்விர், 90 ஏக்கர் பாடசாலையின் அதிபர் அஜ்மல், மற்றும் முசல்பிட்டி பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

# கற்பிட்டி தில்லையூர் மீனவர் சங்கத்தின் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

(சியாஜ்)

கல்விக்கு கரம் கொடுப்போம் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக கற்பிட்டி தில்லையூர் மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (24) தில்லையூர் மீனவ சங்கத்தின் கட்டிடத்தில் சங்கத்தின் தலைவர் சபுருல்லாஹ் தலைமையி இடம் பெற்றது.

இந் நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு உறுப்பினர் ஏ.ஆர்.எம் முஸம்மில், தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ் எம்.அரூஸ், ஐயூப் பாடசாலையின் பிரதி அதிபர் என்.பீ.எம் நவாஸ், புதுக்குடியிருப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் என் எப் நாஜியா தில்லையூர் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் அன்வர்தீன் மற்றும் ஊர் பிரமுகர்களுடன் பெற்றார்களும் பிள்ளைகளும் கலந்து



சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



டித்வா சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொலன்னறுவை மாவட்ட லங்காபுர மற்றும் தம்பாலை அல் மதீனா ஆகிய ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட போது .

(படம்:- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

# கிரீன்லாந்துக்கு கிரீன் கார்ட்




எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)


1917ஆம் ஆண்டில் டென்மார்க், தனது விர்ஜின் தீவுகளை அமெரிக்காவுக்கு விற்றது. அதற்கும் முன்னதாக 1867ஆம் ஆண்டு, நாங்கள் அலாஸ்காவை 7.2 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு அமெரிக்காவுக்கு விற்றோம். எனவே இந்த பிரச்சனைக்கும் எங்களுக்கும் இந்த சம்பந்தமும் கிடையாது” என்று அந்நாட்டு அதிபர் பேசியிருக்கிறார் என்று அந்நாட்டு செய்தி ஊடகமான ‘டாஸ் (TASS)’ செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்த மாதம் வெனிசுவேலாவில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான ராணுவ நடவடிக்கையால் உற்சாகமடைந்து கிரீன்லாந்து விவகாரத்தில் தனது ஆக்ரோஷமான பேச்சைத் தொடங்கினார்.

கிரீன்லாந்து மீதான உரிமை கோரல்கள், ராணுவ நடவடிக்கை குறித்த எச்சரிக்கைகள் மற்றும் ஐரோப்பாவின் பாரம்பரிய நட்பு நாடுகளுக்கு எதிரான வர்த்தக வரிகள் என உலகம் தினமும் ஒரு செய்தியை எதிர்கொண்டது.

ரஷ்யா இந்த விவகாரத்தில் முழுமையாக அக்கறை எடுத்து கொள்ளவில்லை என்பதை போல் காட்டிக் கொண்டாலும் ரஷ்யா அதிபர் புதினின் இந்த நிலைப்பாடு, சர்வதேச அளவில் கவனம் பெற்றிருக்கிறது. ஏனெனில் அவர், அமெரிக்காவுக்கு எதிராக பேசுவார் என பலரும் நம்பியிருந்தனர். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. அதே சமயம் டிரம்பின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாகவும் பேசியிருக்கிறார் புதின். இந்த கருத்துக்கு பின்னால் மிகப்பெரிய காரணம் இருக்கிறது. தற்போது உக்ரைன் விஷயத்தில் நேட்டோ வால்தான் பிரச்சனை எழுந்திருக்கிறது. மட்டுமல்லாது, மொத்த ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிராக பேசி வந்தன.

கிரீன்லாந்து பிரச்சனை வெடித்த பின்னர், அந்த நாடுகள் டிரம்புக்கும், அமெரிக்காவுக்கும் எதிராக திரும்பியுள்ளன. இப்படியே ரஷ்யாவுக்கு எதிரான கருத்துக்களை நீர்த்துப்போக செய்யவே புதின் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். சிம்பிளாக சொன்னால், பிரச்சனையை தூர நின்று புதின் ரசித்து வருகிறார்.

அதேபோல கிரீன்லாந்து பிரச்சனை தீவிரமானால், நிச்சயம் நேட்டோவில் பிளவு ஏற்படும். நேட்டோ உடைய வேண்டும் என்பதுதான் புதினின் ஆசை. நேற்று கூட, அமெரிக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு, நேட்டோ அமைப்பு குறுக்கே வரக் கூடாது என்று டிரம்ப் கூறியிருந்தார். இதனால் இந்த அமைப்பில் உள்ள மற்ற ஐரோப்பிய நாடுகள் டென்ஷனாகியுள்ளன. நேட்டோ தனது இறுதி கட்டத்தை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கிறது என்பதை புதின் ரசிக்கிறார். எனவேதான் அவரது வாயிலிருந்து இந்த கருத்து வந்திருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. அதே சமயம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விட்டு கொடுக்கும் நடவடிக்கை எடுக்க அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முன்வரவில்லை அல்லது முயலவில்லை.மாறாக நானே உலகின் சக்கரவர்த்தி என்கிற இறுக்கமான மனநிலை தான் இன்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை முழுமையாக பாதித்து உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது, இவை அனைத்தும் ஒரு புகையைப் போல மறைந்துவிட்டதாகத் தெரிகிறது.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை எப்படி கையாள்வது என்பது நன்கு உணர்ந்து நிலையில் கையாள்வதில் வல்லவர் என்று கருதப்படும் நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ருட்டே, அதிபரின் இந்த ஆபத்தான போக்கைக் கட்டுப்படுத்தியதாகத் தெரிகிறது. அதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

கடந்த வாரம் டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து வெளியுறவு அமைச்சர்கள் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட பயணத்தின் போது இதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டிருக்கலாம். அந்தப் பயணத்தின் முடிவில், கிரீன்லாந்தின் எதிர்காலம் குறித்து விவாதிக்க ஒரு “செயற்குழு” அமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

வடக்கு அட்லான்டிக் கூட்டணியையே சிதைக்கக்கூடிய ஒரு சிக்கலை ரூட்டே மிக நுட்பமாக கையாண்டுள்ளதாகத் தெரிகிறது.இந்த ஒப்பந்தத்தின் முழு விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை என்றாலும், இந்த நிலையை அடைய ஏன் இரண்டு வார கால கடுமையான நெருக்கடி தேவைப்பட்டது என்று பலர் வியக்கிறார்கள்.

கிரீன்லாந்தில் அமெரிக்க ராணுவத்தின் இருப்பு அதிகரிப்பதை தான் மகிழ்ச்சியுடன் வரவேற்பதாக டென்மார்க் நீண்டகாலமாகவே கூறி வந்தது.

தற்போது நேட்டோ அந்தத் தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் தனது பாதுகாப்பை பலப்படுத்த உறுதி அளித்திருந்தால், அது நேட்டோ கூட்டணி இறுதியாக கிரீன்லாந்து மீது தகுந்த கவனம் செலுத்துகிறது என்று டொனால்ட் டிரம்பிற்கு நம்பிக்கையளிக்கும் வகையில் அமையும்.

நியூயார்க் டைம்ஸ் இதழ் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள செய்தியில், ஒரு புதிய திட்டம் விவாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கிறது. அதன்படி, சைப்ரஸில் பிரிட்டன் வைத்திருக்கும் இறையாண்மை கொண்ட ராணுவத் தளங்களைப் போலவே, கிரீன்லாந்தின் சில சிறிய பகுதிகளை அமெரிக்க ராணுவத் தளங்களை அமைப்பதற்காக டென்மார்க் விட்டுக் கொடுக்கலாம் என்று கூறப்படுகிறது.

கிரீன்லாந்தின் கனிம வளங்களை அணுகுவதற்கான வாய்ப்புகளும் ஒப்பந்தத்தில் அடங்கும் என்று டிரம்ப் கூறியுள்ளார்.அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான கனிம வளங்களை தனதாக்கி கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை எடுத்து வருவதைக் காணலாம். இருப்பினும், டென்மார்க்கோ அல்லது நேட்டோ அமைப்போ இந்தத் தகவலையோ அல்லது பிற செய்திகளையோ உறுதிப்படுத்தவில்லை.

நேட்டோ அமைப்பு இது குறித்து கூறுகையில், இந்தப் பேச்சுவார்த்தைகள் “ஏழு ஆர்க்டிக் நட்பு நாடுகளின் (அமெரிக்கா, கனடா, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்து) கூட்டு முயற்சிகளின் மூலம் ஆர்க்டிக் பாதுகாப்பை உறுதி செய்வதில் கவனம் செலுத்தும்” என்றும், கிரீன்லாந்தில் ரஷ்யா மற்றும் சீனா பொருளாதார ரீதியாகவோ அல்லது ராணுவ ரீதியாகவோ கால்பதிப்பதைத் தடுப்பதே இதன் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளது. இந்த ஒப்பந்தம் குறித்த விவரங்கள் விரைவில் வெளிவரும்.

ஆனால், இந்த நிலையை எட்டுவதற்கு டொனால்ட் டிரம்ப் பதினைந்து நாட்கள் நீடித்த நாடகத்தையும், நேட்டோவிற்குள் ஒரு இருத்தலியல் நெருக்கடியையும் தூண்டினார் என்பதை எளிதில் மறந்துவிட முடியாது. கனடா பிரதமர் மார்க் கார்னி இதை ஒரு “பிளவு” என்று அழைத்ததுடன், பழைய ஒழுங்குமுறை “மீண்டும் வராது” என்றும் கூறினார். ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், இது ஒரு “நில அதிர்வு போன்ற மாற்றம்” என்று குறிப்பிட்டதுடன், ஐரோப்பா அதிக சுதந்திரத்துடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். வழக்கம் போல அனைத்தும் இயல்பு நிலைக்குத் திரும்புவது என்பது தற்போது கடினமாகவே தெரிகிறது.

சுவிஸ் நாட்டின் டாவோஸ் நகரில் நடந்து வரும் உலக பொருளாதார கூட்டத்தில் பேசிய டொனால்ட் டிரம்ப், கிரீன்லாந்தை வலுக்கட்டாயமாக கைப்பற்ற மாட்டேன் என்று அறிவித்துள்ளார்.இதேவேளையில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் கிரீன்லாந்து கையகப்படுத்த வேண்டும் என்ற முடிவும், அதை எதிர்க்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு வரி விதிப்பு அச்சுறுத்தலும் தான் இத்தகைய முடிவுக்கு முக்கிய காரணமாக உள்ளன. இந்த நடவடிக்கை இரு கண்டங்களுக்கிடையேயான வர்த்தக உறவில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வர்த்தக ஒப்பந்தம் ஐரோப்பிய ஒன்றியம் (ஐரோப்பா) அமெரிக்காவுடன் கடந்த ஜுலை மாதம் ஸ்காட்லாந்தின் டர்ன்பெர்ரியில் செய்த ஒப்பந்தத்தை தான் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறுத்தப்பட்டு உள்ளது. இந்த ஒப்பந்தத்தில் ஐரோப்பா அமெரிக்க பொருட்களுக்கு இறக்குமதி வரியை குறைக்கும், இதேபோல் அமெரிக்க லாப்ஸ்டர்களுக்கு ஜீரோ வரி தொடரும்.ஆனால் அமெரிக்கா ஐரோப்பா பொருட்களுக்கு 15 சதவீத வரியை தொடரும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.ஆனால் இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்திலும், ஐரோப்பா அரசுகளின் ஒப்புதல் தேவை. இத்தகைய நிலையில் டிரம்ப்-ன் நிலைப்பாட்டின் காரணமாக இந்த ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பல உறுப்பினர்கள் இந்த ஒப்பந்தம் சமமாக இல்லை என்று விமர்சித்துள்ளனர். ஐரோப்பா பெரும்பாலான வரிகளை குறைக்கும் போது அமெரிக்கா 15 சதவீத வரியை தொடர்வது நியாயமற்றது என்று கூறுகின்றனர். டிரம்ப்பின் புதிய வரி அச்சுறுத்தல் இந்த ஒப்பந்தம் ஒப்புதல் பெறுவதற்கான வாய்ப்பை உடைத்து விட்டது.

இந்த நிலையில் ஜனவரி 20 அன்று செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற குழு தலைவர் பெர்ன்ட் லாங்கே, “டிரம்ப்பின் அச்சுறுத்தல் டர்ன்பெர்ரி ஒப்பந்தத்தை உடைத்து விட்டது. எனவே இந்த ஒப்பந்தத்தை அடுத்த அறிவிப்பு வரும் வரை நிறுத்துகிறோம்” என்று தெரிவித்தார். ஐரோப்பாவின் இந்த முடிவு டிரம்ப்பை கோபப்படுத்தலாம். இதனால் அமெரிக்கா அரசு ஐரோப்பா மீது உடனடியாக அதிக வரிகளை விதிக்கலாம் என்று தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கிடையே மேலும், இதற்காக ராணுவ நடவடிக்கையையும் பரிசீலனை செய்வதாகவும் அவர் கூறி வந்தார். டிரம்பின் இந்த பேச்சுக்கு டென்மார்க் மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனால் ஐரோப்பிய நாடுகளையும் சாடிய டிரம்ப், அவர்கள் மீது 10% வரி விதிக்கப் போவதாகக் குறிப்பிட்டார். மேலும், கிரீன்லாந்து விவகாரத்தில் உடன்பாடு எட்டவில்லை என்றால் வரியை 25% வரை உயர்த்துவேன் என்றும் அவர் மிரட்டினார். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.


இந்த நிலையில் கிரீன்லாந்து விவகாரத்தில் வரிகளை அறிவிக்கப் போவதில்லை என டிரம்ப் கூறியுள்ளார். ஏற்கனவே நேற்றைய தினம் உலக பொருளாதார மன்றத்தில் பேசிய டிரம்ப், கிரீன்லாந்து மீது அமெரிக்கா ராணுவத்தை இறக்காது என அறிவித்து இருந்தார். அந்த அறிவிப்பு வந்து சில மணி நேரத்திலேயே வரி விதிக்கப் போவதில்லை என்பதையும் டிரம்ப் அறிவித்துள்ளார்.

இது குறித்து டிரம்ப் தனது ட்ஷரூத் சோஷியல்ஸ் பக்கத்தில் மேலும், “நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டேவுடன் ஆக்கப்பூர்வமான ஒரு ஆலோசனையை நடத்தினேன். கிரீன்லாந்து மற்றும் முழு ஆர்க்டிக் பிராந்தியத்திற்குமான எதிர்கால ஒப்பந்தத்திற்கான கட்டமைப்பை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இந்தத் தீர்வு, நிறைவேற்றப்பட்டால், அமெரிக்காவிற்கும், அனைத்து நேட்டோ நாடுகளுக்கும் ஒரு சிறந்த ஒன்றாக இருக்கும். இதன் காரணமாகப் பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வரவிருந்த இறக்குமதி வரிகளை நான் விதிக்கப் போவதில்லை. கிரீன்லாந்தைப் பொறுத்தவரை அங்கும் கோல்டன் டோம் பாதுகாப்பு தருவது குறித்துக் கூடுதல் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. வரும் காலங்களில் கூடுதல் தகவல்கள் வெளியிடப்படும். அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், வெளியுறவுச் செயலாளர் மார்கோ ஷரூபியோ, சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவார்கள்” என்று பதிவிட்டுள்ளார்.

கிரீன்லாந்தைக் கைப்பற்றப் போவதாக டிரம்ப் சொன்னபோது அதை மிக கடுமையாக எதிர்த்த டென்மார்க் வெளியுறவு அமைச்சர் லார்ஸ் லோக்கி ராஸ்முசென், வரிகள் திட்டத்தைக் கைவிட்ட இந்த முடிவை வரவேற்றார். இது ஒரு நேர்மறையான திருப்பம் என்றார் ராஸ்முசென். இந்த விவகாரம் சரியான முறையிலேயே செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டிரம்ப்பிற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க நிறுவனங்களுக்கு வரி விலக்கு தரும் மசோதா மீதான வாக்கெடுப்பை ஐரோப்பிய ஒன்றியம் தள்ளி வைத்திருந்தது. இந்த மசோதா மீது அடுத்த சில வாரங்களில் வாக்கெடுப்பு நடக்கும் எனக் கூறப்பட்டு இருந்த நிலையில், டிரம்ப்பின் சர்ச்சைப் பேச்சுகளால் அதைத் தள்ளி வைக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்தது. அதைத் தொடர்ந்தே டிரம்ப் “வரி இல்லை..! படையெடுப்பு இல்லை..!”எனப் பல்டி அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பன்னூலாசிரியர் கவிஞர் அலறியின் "தந்தனக்கிளி" கவிதை நூல் வெளியீடு





(நூருல் ஹுதா உமர்)

பன்னூலாசிரியர், கவிஞர் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி அலறி (ஏ.எல்.எம். றிபாஸ்) அவர்களால் எழுதப்பட்ட 08வது நூலான "தந்தனக்கிளி" கவிதை நூல் வெளியீட்டு விழா, புதுப்புனைவு வட்டத்தின் ஏற்பாட்டில் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர், சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ்.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சர், சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்.

நூலின் அறிமுக உரையை ஆசிரியை மற்றும் கவிஞர் றியாசா எம். சவாஹிர் நிகழ்த்தியதுடன், நூலாய்வுரைகளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கைப்பரப்பு செயலாளரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கவிஞர் கல்முனை ஜவாத், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகமும், தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளருமான எழுத்தாளர் மன்சூர் ஏ. காதிர், பேஜஸ் புத்தக நிலையத்தின் நிறுவுனரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான இலக்கிய விமர்சகர் சிராஜ் மஷூர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவி, சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா சாரிக் காரியப்பர், கிழக்கின் கேடயம் அமைப்பின் பிரதானியும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் உள்ளிட்ட சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட சட்டத்தரணிகள், கல்விமான்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் ஊடகவியலாளர் நூருல் /ஹுதா உமர் அண்மையில் தேசிய விருதை பெற்றமைக்காக அதிதிகளினால் பொன்னாடை போத்தப்பட்டு பணப்பரிசு வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தர்காநகர் முஅய்யதுல் இஸ்லாமியின் 108 வது வருடப் பூர்த்தி ஒன்றுகூடல்





(பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் 108 ஆவது வருட பூர்த்தியையிட்டு முக்கிய ஒன்று கூடல் நிகழ்வொன்று கல்லூரி மண்டபத்தில் அரப்புக் கல்லூரி நிர்வாக குழு தலைவர் ஏ.ஸீ.ம் இக்பால் தலைமையில் (25) இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் கல்லூரி அதிபர் மௌலவி அஷ்ஷேக் நிஃப்ராஸ் (முப்தி), கல்லூரி உஸ்-தாத்மார்கள், முகாமையாளர் மௌலவி முஹம்மத் இஃபாம், கல்லூரி மாணவர்கள், உலமாக்கள், பெற்றோர்கள், செயலாளரும் காதி நீதிபதியுமான அல்ஹாஜ் அப்துல் அஃலா, உபசெயலாளர் அஷ்ஷேக் மௌலவி எம்.எச்.எம் பர்ஹான் (நளீமி), உப தலைவர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம் பதியுதீன், உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பேருவலை ஜாமியா, நளீமியா கலாபீடத்தின் முதல்வர் அஷ் ஷேக் உஸ்தாத் அகார் முஹம்மத் (நளீமி) சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டமை விஷேட அம்சமாகும்.

# கலாபூசணம் பீர் முகம்மதினால் நூல்கள் அன்பளிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும் சிரேஷ்ட எழுத்தாளருமான கலா பூசணம் ஏ. பீர் முகம்மது, நீண்ட காலமாக சேகரித்து வந்த பெறுமதியான நூல்களில் ஒரு தொகுதியை சாய்ந்தமருது மழ்ஹருஷ் ஷம்ஸ் மகா வித்தியாலய நூலகத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

சாய்ந்தமருது பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நூலகர் ஏ.எம். முஸ்தாக், பாடசாலை அதிபர் ரிப்கா அன்சார் மற்றும் உதவி அதிபர்கள், பாடசாலை நூலக பொறுப்பாசிரியை உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

எதிர்காலத்தில் ஏனைய பாடசாலை நூலகங்களுக்கும் இவ்வாறான நூல்களை அன்பளிப்பு செய்ய திட்டமிட்டுள்ளதாக கலாபூசணம் ஏ. பீர் முகம்மது இதன்போது குறிப்பிட்டார்.



ஓய்வுபெற்ற பின்னரும் கல்வி மற்றும் இலக்கியத் துறைகளில் மிகவும் ஆர்வத்துடன் இயங்கி வருகின்ற கலாபூசணம் ஏ. பீர் முகம்மது போன்றவர்களின் இத்தகைய பங்களிப்புக்கள், பாடசாலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப் பதற்கும் மாணவர் சமூகத்தின் அறிவுப் பசிக்கும் பெரும் துணையாக அமையும் என்று நூலகர் ஏ.எம். முஸ்தாக் பாராட்டுத் தெரிவித்தார்.

# சீனன்கோட்டை பவுண்டேசன் நடாத்திய கைப்பணி கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்





(பீ.எம் முக்தார்)

சீனன் கோட்டை பவுண்டேசன் ஏற்பாடு செய்த கைப்பணி கண் காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் (24) நடைபெற்றது.

பிரதேசத்தில் சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்கோடு கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சீனன் கோட்டை பவுண்டேசன் பெண்களுக்கான தையல் கலை பயிற்சி நெறியை நடாத்தி வருகிறமை குறிப்பிடத் தக்கது.

அத்தோடு இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்ட சகோதரிகள் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு நல்ல வருவாயையும் ஈட்டி வருவதும் விஷேட அம்சமாகும். ஏரத்தாள 800 க்கும் மேற்பட்ட சகோதரிகள் இத்தகைய தையல் கலை பயிற்சி நெறிகளில் கலந்து பயன் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஏற்பாடு செய்யப்பட்ட தையல் பயிற்சி நெறியில் 90 மாணவிகள் கலந்து பயிற்சி நெறியை பூர்த்தி செய்துள்ளனர். அவர்களது திறன்களை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பானதொரு கைப்பணி கண்காட்சியொன்றையும் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

பயிற்சியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கும் வைபவமும் பாடசாலை தேசமான்ய பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது.

பவுண்டேஷன் தலைவர் அல் ஹாஜ் பஸால் மர்ஸூக்கின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் பவுண்டேஷன் செயலாளரும் ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரை யாளருமான அஷ் ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி), உப தலைவர் அல் ஹாஜ் பிஷ்ருல் நவால் முக்தார், பயிற்சி ஆசிரியை கலீலா மிஹ்லார் உட்பட சீனன் கோட்டை பவுன்டேசன் உறுப்பினர்கள் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சமூகத்துக்கு பயனுள்ள இப்பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைவரும் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அதிதிகள் வேண்டிக் கொண்டனர்.



# வெள்ளத்தின் பின் நம்பிக்கையை இழக்காத ஒரு மனிதனின் நினைவுகள்

வெள்ளம் என்பது நீரின் பெருக்கம்
மட்டும் அல்ல.
அது ஒரு மனிதனின் வாழ்க்கைக்குள்
புகுந்து,
அவன் கட்டிய கனவுகள், உழைப்புகள்,
நம்பிக்கைகள் எல்லாவற்றையும் ஒரே
இரவில் அசைத்துப் பார்த்த ஒரு
சோதனை.
அந்த இரவு இன்னும் என் நினைவில்
தெளிவாக உள்ளது.
நீர் மெதுவாக உயரத் தொடங்கியபோது,
என் வீடு மட்டும் அல்ல,
என் மனமும் அசையத் தொடங்கியது.
உணர்வுகள் மங்கின.
தொழில் தளர்ந்தது.
நாளைய நம்பிக்கைகள்
மௌனமாக உடைந்தன.
வெள்ளம் உயர்ந்தபோது,
கையில் இருந்தது ஒன்றுமே இல்லை.
இன்றும், பொருளாதார ரீதியில் அந்த
நிலை முழுமையாக மாறிவிடவில்லை.
ஆனால், இதயத்தின் ஆழத்தில் ஒரு
உண்மை மட்டும் உறுதியாக இருந்தது,
இப்பவும் இருக்கிறது.
அதுதான்..
“இன்னும் அல்லாஹ் இருக்கிறான்.”
அல்லாஹ் எழுதும் வாழ்க்கைக் கதையில்
எல்லா அத்தியாயங்களும் இனிமையாய்
இருக்க வேண்டியதில்லை.
சில பக்கங்கள் கண்ணீரால்
எழுதப்படுகின்றன. சில பக்கங்கள்
கவலைகளால் எழுதப்படுகின்றன.
ஆனால் அவையே
ஒரு மனிதனுக்குள்
ஈமானின் ஆழத்தை
வெளிச்சமாக்குகின்றன.
வெள்ள அனர்த்தம்
என்னை உடைக்க வந்ததாக நான்
நினைக்கவில்லை.
அது என்னை அவனிடம் இன்னும்
அருகே அழைத்த ஒரு அழைப்பாகவே
உணர்ந்தேன்.
உடைந்த சுவர்களின் நடுவிலும், கசந்த
உள்ளத்தின் இடையிலும் நான் நிமிர்ந்து
நிற்கக் கற்றுக்கொண்டேன்.
அந்த நேரத்தில் என் கால்களாய்
இருந்தது பொறுமை.
என் குரலாய் இருந்தது பிரார்த்தனை.
என் உயிராய் இருந்தது ஈமான் எனும்
நம்பிக்கை.
எடுத்தவனும் அவன்தான்.
திரும்பத் தருபவனும் அவன்தான்.
இந்த உண்மை
நெஞ்சத்தை தளராமல்
சமாதானத்தில் நிறுத்தியது.
வெள்ளம் வீடுகளை மூழ்கடித்தது.
தொழில்களை எடுத்துச் சென்றது.
ஆனால், அதனால் ஈமானை மூழ்கடிக்க
முடியவில்லை.
வீடு உடைந்தாலும்,
வாழ்க்கை திசை மாறினாலும்,
நம்பிக்கை மட்டும்
சாய்ந்துவிடவில்லை.
காலம் வறண்டாலும்,
அருள் வற்றாது.
வெள்ளம் சீறினாலும்,
அல்லாஹ்வின் இரக்கம் ஒருபோதும்
குறையாது.
“அவன் அருகில் இருக்கிறான்”
என்ற ஒரே உண்மை,
என் இழப்புகளின் சத்தங்களை
மௌனமாக்கியது.
இந்த வெள்ள அனர்த்தம்
எனக்கு ஒரு பாடம் கற்றுத் தந்தது:
உடைந்தது உலகம் தான்...
இறைநம்பிக்கை அல்ல.
இழந்தது பொருள்கள் தான்...
படைத்த ரப்பை அல்ல.
அவன் அருகில் இருக்கும் வரை,
என் நெஞ்சம் நிரம்பியே இருக்கும்.
நான் வீழ்ந்தவன் அல்ல.
அவன் சோதனையில்
தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற நம்பிக்கை
என்னுள் ஆழமாக வேர்விட்டிருக்கிறது.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




**பயாஸா பாஸில்**

# ஒரு பிள்ளைக்குத் தேவையான நித்திரையின் அளவு



நித்திரை என்பது மனித வாழ்க்கையில் மிகவும் அவசியமான ஒன்று. குறிப்பாக பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் நித்திரை மிக முக்கிய பங்காற்றுகிறது. பிள்ளைகள் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வளர வேண்டுமென்றால், அவர்களுக்கு தேவையான அளவு நித்திரை கிடைக்க வேண்டும். வயதிற்கேற்ற நித்திரையின் அளவு மாறுபடும். பொதுவாக 3 முதல் 5 வயதுள்ள பிள்ளைகளுக்கு தினமும் 10 முதல் 13 மணி நேரம் வரை நித்திரை தேவை. 6 முதல் 12 வயதுள்ள பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு 9 முதல் 11 மணி நேரம் நித்திரை அவசியம்.

இளம் வயது பிள்ளைகள் போதுமான நித்திரை பெறாதால், அவர்கள் சோர்வாகவும் கவனம் குறைந்தவர்களாகவும் மாறுவர்.

போதிய நித்திரை கிடைத்தால் பிள்ளைகளின் நினைவாற்றல் மேம்படும், பாடங்களை எளிதில் புரிந்து கொள்வார்கள், மனஅழுத்தம் குறையும். மேலும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, உடல் வளர்ச்சியும் சீராக நடைபெறும்.

மறுபுறம், குறைந்த நித்திரை பிள்ளைகளில் கோபம், கவனம் சிதறல், உடல் சோர்வு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். இன்றைய காலத்தில் தொலைக் காட்சி, கைபேசி, கணினி போன்றவற்றை அதிகமாக பயன்படுத்துவதால் பிள்ளைகள் தாமதமாக உறங்கும் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். இது அவர்களின் நித்திரையை பாதிக்கிறது. எனவே, பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒரு 11றவஒழுங்கான உறக்க நேரத்தை நிர்ணயித்து, தூங்குவதற்கு முன் திரைகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வழிகாட்ட வேண்டும்.

ஒரு பிள்ளையின் நல்ல உடல் மற்றும் மன வளர்ச்சிக்குப் போதுமான நித்திரை இன்றியமையாதது. பிள்ளைகள் நித்திரை பெறுவதை உறுதி செய்வது பெற்றோர்களும் சமூகமும் கொண்ட முக்கிய பொறுப்பாகும்.




அரபாத் பஹுர்தீன்

# பவனின் போராட்டம் வீண்

## இலங்கையை வீழ்த்தி தொடரை தனதாக்கியது இங்கிலாந்து

இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் தீர்மானிக்க 3ஆவதும் இறுதியுமான போட்டியில் 53 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 12 வருடங்களின் பின்னர் 2:1 என தொடரை வெற்றி கொண்டது.

சுற்றுலா இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ரி20 ஆகிய வெள்ளைப் பந்து தொடரில் பங்கேற்க இலங்கை வந்துள்ளது இதில் முதலில் ஆரம்பித்த 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணியும், 2ஆவது போட்டியில் இங்கிலாந்து அணியும் வெற்றி பெற்றிருக்க தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் (27) கொழும்பு ஆர் பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவுப் போட்டிகளாக இடம்பெறது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஹென்றி புஷ்ரூக் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணிக்கு நட்சத்திர வீரரான ஜோ ஷரூட் (11) மற்றும் அணித் தலைவரான ஹென்றி புஷரூக் (136) ஆகியோர் விளாசிக் கொடுத்த ஆட்டமிழக்காத சதம் கடந்த துடுப்பாட்டத்தின் உதவியுடன் 50 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 357 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் தனஞ்சய, ஹசரங்க மற்றும் வென்டர்சி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றினர்.பின்னர் இங்கிலாந்து அணி நிர்ணயித்த 358 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர்கள் அதிரடி ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்த போதிலும் சீரான இடை வெளியில் தமது விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

இருப்பினும் பொறுப்புடன் களத்திலிருந்து தனி ஆளாய் போராடிய இளம் வலது கை துடுப்பாட்ட வீரரான பவன் ரத்நாயக்க தனது கன்னி சதத்தை பதிவு செய்து 121 ஓட்டங்களுடன் இறுதி விக்கெட்டாக ஆட்டமிழக்க இலங்கை அணியின் இன்னிங்ஸ் 46.4 ஓவர்களில் 304 ஓட்டங்களுக்குள் முற்றுப் பெற்றது. பவன் ரத்நாயக்கவுக்கு அடுத்த படியாக பெத்தும் நிஷங்க 50 ஓட்டங்களை 25 பந்துகளில் விளாசியிருந்தார்.

இதனால் இங்கிலாந்து அணி 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றதுடன் சுமார் 12 வருடங்களுக்குப் பிறகு இலஙீகை மண்ணில் வைத்து ஒருநாள் தொடரை 2:1 என கைப்பறியது. பந்துவீச்சில் ஜெக்ஸ், ஓவர்டொன், டவ்சன் மற்றும் ஆதில் ரஷீத் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றினர். இப் போட்டியின் நாயகனாக ஹென்றி புரூகும், தொடரின் நாயகனாக ஜோ ரூட்டும் தொரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

# பவன் ரத்நாயக்கவை புகழ்ந்து பாராட்டினார் ஜோ ரூட்



இலங்கை அணியின் இளம் மத்திய வரிசை வலது கை துடுப்பாட்ட வீரரான பவன் ரத்நாயக்கவை இங்கிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட வீரரான ஜோ ரூட் பாராட்டியதுடன், பவனுக்கு சிறந்த எதிர்காலம் இருப்பதாகவும் புகழ்ந்தார்.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் (27) கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் இங்கிலாந்து அணி நிர்ணயித்த 358 என்ற கடினமான வெற்றி இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு, இளம் வீரர் பவன் ரத்நாயக்க தூணாக நின்று தனது கன்னி சதத்தை பதிவு செய்து 121 ஓட்டங்களை விளாசினார். எனினும், ஏனைய வீரர்களின் போதிய ஒத்துழைப்பு இல்லாததால் இலங்கை அணி தோல்வியைத் தழுவியது.

இதன் மூலம் 12 வருடங்களுக்குப் பின்னர் 2:1 என இங்கிலாந்திடம் ஒருநாள் தொடரை தாரை வார்த்தது இலங்கை.

இந்தநிலையில், பவன் ரத்நாயக்கவின் ஆட்டம் குறித்து நேற்றைய போட்டியின் பின்னர் ஜோ ஷரூட் கூறுகையில், “அவர் மிகச்சிறப்பாக விளையாடினார். சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் அவர் மிகுந்த திறமைசாலி. பந்துகளை லாவகமாகக் கையாள்வதுடன், அதிக டொட் பந்துகள் ஆடாமல் ஓட்டங்களைச் சேகரிக்கிறார். ஸ்ட்ரைக் ரொட்டேட் செய்வதிலும், எல்லைக் கோட்டிற்குப் பந்துகளை அனுப்புவதிலும் அவர் கைதேர்ந்தவர்.”

மேலும், “அவருக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கிறது. அந்த ஆட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவருக்கு ஆதரவாக இன்னும் ஒரு சில வீரர்கள் நிலைத்து நின்றிருந்தால் ஆட்டத்தின் முடிவு மாறியிருக்கும். இனி வரும் காலங்களில் நான் அவரைத் தொடர்ந்து கவனிப்பேன்,” என்றும் ஜோ ரூட் தெரிவித்தார்.

இதனிடையே, இந்தத் தொடர் முழுவதும் ஜோ ஷரூட் அபாரமான துடுப்பாட்ட திறன்களை வெளிப்படுத்தினார். மூன்று போட்டிகளிலும் முறையே 61, 75 மற்றும் ஆட்டமிழக்காத 111 ஓட்டங்களைக் குவித்து, ஒருநாள் உலகக் கிண்ணத் தகுதிக்கான இங்கிலாந்தின் ஓட்டத்தில் தனது முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளதுடன் இத் தொடரின் நாயகன் விருதையும் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ரி20 உலகக் கிண்ண தொடரில் பாகிஸ்தான் பங்கேற்குமா? திங்களன்று முடிவு




அடுத்த மாதம் நடைபெற உள்ள ரி20 உலக கிண்ண தொடரில் பங்கேற்பது தொடர்பான அனைத்து வாய்ப்புகளும் கைவசம் இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் மொஹ்சின் நக்வி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதி இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள 16 நாடுகள் பங்கேற்கும் ரி20 உலகக் கிண்ண தொடரில் பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து பங்களாதேஷ் அணி இந்தியா செல்ல மறுத்திருக்க, இத் தொடரின் இருந்து பங்களாதேஷ் அணியை ஐசிசி நீங்கி பங்களாதேஷ் அணிக்கு பதிலாக ஸ்கொட்லாந்து அணியை இணைத்துள்ளது.

இச் செயலுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடும் கண்டனத்தை தெரிவித்திருக்க இத் தொடரிலிருந்து பாகிஸ்தான் அணியும் விலகுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தது.

இந்நிலையில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் கடந்த இரு நாட்களுக்கு முன்னர் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிஃபைச் சந்தித்தார். பிறகு பேசிய அவர், இந்த விவகாரத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமை அல்லது அடுத்த திங்கட்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

“பிரதமருடனான சந்திப்பு நல்லபடியாக இருந்தது. ஐசிசி விவகாரம் பற்றி அவரிடம் விளக்கினேன். அனைத்து வாய்ப்புகளையும் கைவசம் வைத்துக் கொண்டு இதனை தீர்க்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்,” என தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ரி20 உலக கிண்ண தொடரிலிருந்து பங்களாதேஷ் அணி நீக்கப்பட்டதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விமர்சித்திருந்தது.

எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி தொடங்க உள்ள உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் பங்கேற்கும் அனைத்து போட்டிகளும் இலங்கையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் ரி20 உலகக் கிண்ண தொடருக்கான பாகிஸ்தான் குழாம் அந்நாட்டு கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ள மையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# கிறிஸ்டியானோ ரொனால்டோவின் சிலைக்கு தீ வைப்பு



போர்ச்சுகல் உதைப்பந்தாட்ட நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் வெண்கல சிலையை எரித்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போர்த்துக்கல் இல் உள்ள ரொனால்டோவின் சொந்த ஊரான ஃபஞ்சலில் உள்ள ரொனால்டோ அருங்காட்சியகத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்த சிலையே இவ்வாறு தீவைத்து எரிக்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்த காணொளி சமூக ஊடகங்களில் வைரலானது.

“கடவுளின் இறுதி எச்சரிக்கை” என்ற தலைப்பில் பகிரப்பட்ட அந்த காணொளியில், நபர் ஒருவர் ரொனால்டோவின் சிலையின் மீது எரியக்கூடிய திரவத்தை ஊற்றி பின்னர் தீ வைத்துள்ளார்.

சிலை எரியும் போது அந்த நபர் ராப் இசைக்கு நடனமாடுவதையும் காணலாம்.

இந்த சம்பவம் உலகம் முழுவதும் உள்ள ரொனால்டோ ரசிகர்களிடையே பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. புகழுக்காக இதுபோன்ற செயலைச் செய்ததாக கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எவ்வாறாயினும், அந்நாட்டு பொலிஸார் இந்த சம்பவத்தை விசாரித்து சந்தேக நபரை அடையாளம் கண்டு கைது செய்தனர். சந்தேகநபர் இதற்கு முன்பும் இதே போன்ற குற்றங்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடக உள்ளடக்கத்திற்காக சட்டவிரோதமான செயல்களைச் செய்வது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு இந்தக் கைது சான்றாகும் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.